1293

ம்பர் மீ 1935. மலர் 12—இதழ் 9.

வருஷ சந்தா
ரூ 1-8-0

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி
அம்மாள்.

புதிய நாவல் ஆரம்பம்

## பிச்சைக்காரக் குடும்பம்

அல்லது

## பணப்பேயின் தாண்டவம்

———

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 DEC 1935
MADRAS

அதிகாரம்

1. தண்ணீருக்குப் பதில் கண்ணீரா?
2. கருணையற்ற உலகம்— தருணியின் கலக்கம்
3. உதவிக்குப் பலன் உதையும் குத்தும்
4. தோன்றாத் துணையும் தீராத் துயரமும்
5. பணமற்றோர்கள் பிணத்திற்கு ஒப்பே.

3L
ஊ211,N22:5M
N36.12.9
182980.

மோகினி" ஆபீஸ்
டித் தெரு,
கேணி சென்னை

2

# பொங்கும் காதல் ::

அல்லது **மங்களபாரதி**

துப்பறியும் நாவல்

இந்த ஆண்டின் முதல் 8 இதழ்களில் வெளியான மேற்படி நாவல், சஞ்சிகை ரூபமாக இன்னும் கொஞ்சம் பிரதிகளே நமது கைவசமிருப்பதால், இந்த அருமையான நாவலைப் படிக்க விரும்புவோர் உடனே ரூ. 1 முன் பணமனுப்பினால் தபாற் செலவின்றி அனுப்புகிறோம்.

---

அரிய சந்தர்ப்பம்

# தேசபக்தி ததும்பும் அற்புதமான நாவல்கள்

| | |
|---|---|
| ஸாரமதி | நளினசேகரன் |
| ரூ. 1-12-0 | அணா 8. |

ரூ. 1—12—0 முன்பண மனுப்புவோருக்கு ஸாரமதியுடன் நளினசேகரன் இனாமாக அனுப்பப்படும்.

---

# ஏஜண்டுகள் தேவை

ஒவ்வொரு ஊரிலும் எமது 'ஜகன்மோகினியை' விற்பனை செய்ய செல்வாக்குள்ள ஏஜண்டுகள் தேவை.

மற்ற விவரங்களுக்கு உடனே எழுதவும்.

"ஜகன்மோகினி ஆபீஸ்"

26, தேரடித் தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீ

# பிச்சைக்காரக் குடும்பம்

அல்லது

# பணப்பேயின் தாண்டவம்

---

## முதல் அதிகாரம்

## தண்ணீருக்குப் பதில் கண்ணீரா?

182980

“உலகத்தில் மக்களை தன் வயப்படுத்தி வசீகரம் செய்துகொள்ளும் சக்தி எல்லாவற்றையும் விட சங்கீதத்திற்கே அதிகமாக அமைந்திருப்பது ஈச்வரனின் செயலாகும். மிருகத்தன்மை படைத்த சிலரைத் தவிர உலகத்தில் மற்ற எல்லோரும் அந்த சங்கீதத்திற்கு அடிமையாகாமல் மோகங் கொள்ளாமலிருக்கமாட்டார்களல்லவா? ஆநந்தா! உனது அபிப்பிராயம் எப்படி? தேங்காய் உடைத்தார்ப் போல பதில் சொல்ல வேண்டும்” என்று அழகே உருக்கொண்ட இளம் வாலிபன் தன்னெதிரில் வீற்றிருக்கும் பொற்கொடியை நோக்கிக் கேட்டான்.

அருமையான பூர்ண மதியைப் பழிக்கும் முகத்தில் புன்னகை தவழ நித்யானந்தம் என்கிற அப் பாவை மடவன்னம் அந்த வீர வாலிபன் சொல்லிய விஷயத்தையே தானும் ஆமோதிப்பதைத் தனது கருவிழிகளின் பளிச்சென்ற பார்வையினால் தெரிவிப்பது போன்று அவனைப் பார்த்துத் தலையை அசைத்து “ஆமாம். என்னுடைய அபிப்பிராயமும் இதுவேதான். வெகு நாட்களாக நான் இவ் விஷயத்தில் எனது சகோதரியிடம் தர்க்கம் செய்ததுண்டு. என்

னுடைய அபிப்பிராயத்திற்குச் சிறிது மாறுபட்டே என் சகோதரியின் அபிப்பிராயமிருக்கும்.

சங்கீதத்தில் ருசியோ, ஸ்வாரஸ்யமோ, உணர்ச்சியோ, ஆழமான ஞானமோ...தன்னை மீறி மெய் மறக்கும் ஆநந்தமோ, அர்த்தத்தை மட்டும் அறிந்து அனுபவிக்கும் சக்தியோ அல்லது ராகத்தை...தாளத்தை... ச்ருதி லயத்தை ... சமகம்...அகாரம்... ஜிலுஜிலுப்பான சாரீரம் பாடும் கம்பீரம் அல்லது இனிப்பான நயம்...பாவம், ஸ்வர வகைகள்...உச்சரிப்பு, முதலிய பலவிதமான அம்சங்களில் எல்லோரும் எல்லாவற்றையும் அறிய முடியாது...

ஆனால் அப்படி எல்லாவற்றையும் அறியும் சிரேஷ்டர்களும் சிலர் இல்லாமலில்லை. அத்தகையோர் பெரிய ஆதார கர்த்தர்களாகி விடுகிறார்கள். மேற்குறித்த ஒவ்வொன்றையோ, அல்லது சிலவற்றையோ சர்தாரண மக்களில் பெரும்பாலாரும் அறிந்து அனுபவிப்பவர்களே யாவார்கள். அப்படி இல்லாதவர்கள் மிருகத்திலும் கடையர்கள்தான். ஏனெனில், பசுவும், பக்ஷிகளும், பாம்பும், இனிமையான தாகத்திற்கும் சங்கீத ரம்மியத்திற்கும் பரவசமாகிக் கட்டுப்படுகின்றன வல்லவா?''

என்று கூறி முடிக்கு முன்பு மதுரமான கானம் காதில் பட்டது. உடனே அங்கு உட்கார்ந்திருந்த நாராயணன் என்கிற வாலிபன் “ஆ! அதோ பார்! என்ன அருமையான கானம்! என்ன இனிமையான சாரீரம்! என்ன புதுமையான பாடல்! எத்தனை மகிமையான அர்த்தம்...யார் இத்தனை அழகாய்ப் பாடுகிறவர்கள்'' என்று கூறிக்கொண்டே வீதியில் வந்தான். அப் பொற்கொடியும் அவனுடன் வந்தாள்.

வீதியில் சுமார் 70 வயதுக்கு மேற்பட்ட ஓர் கிழவன்—இரண்டு கண்களும் தெரியாத கபோதி—தள்ளாடியவாறு நடக்கிறான். அவன் கையில் ஒரு தட்டும், அதில் ஒரு விளக்கும் பிடித்திருந்தான். அவன் முழங்கைக்குள் தன் முழங்கையைப் போட்டுப் பிடித்து ஒரு சிறுவன் அழைத்து வருகிறான். சுமார் 15 வயதுள்ள பெண் ஒரே

கந்தலாகத் தொங்கும் உடையும், பரந்த விசாலமான முகத்தில் பெரிய குங்குமப் பொட்டும் அணிந்து வெகு வணக்கமாயும் மன முருகும்படியும் "தாய்மார்களே! கனவான்களே! இந்த ஏழைப் பரதேசிக்கு ஒரு தம்பிடி போட யாரும் இல்லையா! இரண்டு கண்க ளும் தெரியாத கபோதி யம்மா! தள்ளாத கிழவன் தாயே!...தர்ம வான்களே!" என்று கேட்பதும், உடனே

ஊரிலேன் காணியில்லை உறவுமற்றொருவரில்லை
பாரில் நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
காரொளி வண்ணனே! கண்ணனே! கதறுகின்றேன்
ஆருளர் களைகணம்மா! அரங்கமா நகருளானே!

—திருமாலை.

என்கிற பாசுரத்தை அதிமனோகரமாகப் பாடுவதும் திரும்பவும் பிச்சை கேட்பதுமாக வருகிறாள். அப்பொழுது அஸ்தமிக்கும் நேரமாகிவிட்டது. மந்தாரமான பொழுதும் சிலு சிலுப்பான காற்றும் ஒன்று கூடி மக்களைப் பரவச முறச் செய்யும் வேளையில் இந்த பிச்சைக்காரப் பெண்ணின் இனிய கானம் பிரம்மானந்த விருந்தாகவிருந்தது.

வீதியில் போவோரும் வருவோரும் ஆநந்தமாகப் பாட்டைக் கேட்டு விட்டு தாராளமாகக் கம்பி நீட்டுகிறார்களேயன்றி ஒரு தம்பிடி கூட அனேகர் போடவில்லை. நூற்றுக்கு நான்கு பேர்கள் போட் டால் அதிகம். ஆனால் ஒவ்வொரு வீட்டிலும் கூட்டமாக நின்று வேடிக்கை பார்ப்பதும் பாட்டைக் கேட்டுவிட்டு "போடி போ! அஸ் தமிக்கும் நேரத்தில் யார் பிச்சை போடுவார்கள் போ......போ....." என்று வெகு அட்டகாஸத்துடன் விறட்டி விட்டுப் போவதுமாக விருக்கிறார்கள்.

பிச்சைக்காரப் பெண் "தாயே! இந்த தள்ளாத ஆத்மாவுக்கு ஒரு பிடி அன்னங் கொடுங்கள். பட்டினியால் வருந்துகிறார். காலை முதல் சுற்றியும் ஒரு வயிறு கஞ்சிக்கும் பொருள் கிடைக்கவில்லை. தள்ளாத ஆத்மா குளிர்ந்தால் உங்கள் குடும்பமே குளிர்ந்திருக்கும்" என்றாள்.

அங்குள்ள ஒரு பெரியம்மாள் "ஆமாண்டீ! சூத்திரனுக்கும் பள்ளனுக்கும் போட்டுத்தான் எங்களுக்கு மோக்ஷம் வரப்போகிறது. ஒழக்காட்டமா இருந்துண்டு எங்களுக்கு வேதாந்தம் பேச வந்து விட்டாயோ! போடீ வாயாடீ!" என்று அதட்டினாள். அந்தப் பெண் பதிலே சொல்லாமல் மீண்டும்,

"பாதியா யழுகின கால் கையரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தாரேனும்
ஆதியா யரவணையா யென்பாராகில்
அவரன்றே யாம் வணங்கும் அடிகளாவர்
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோ ரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோ ரேனும்
போதில் நான்முகன் பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்ருதார் புலையர் தாமே,"

—பிள்ளைப் பெருமாளய்யங்கார்
அருளிச் செய்த திருவரங்கக்கலம்பகம்.

என்ற பாடலை பாடிக் கொண்டே நடக்க வாரம்பித்தாள். இந்தப் பாடலையும் இதன் அர்த்தத்தையும் கேட்ட அருகிலிருந்த சிலருக்கு மிகவும் வியப் பேற்பட்டு மனம் இளகிப் போய் விட்டது. "அடாடா! இந்தப் பெண் இப் பாடலின் அர்த்தத்தைத் தெரிந்து தான் பாடுகிருளா! அன்றி தெய்வச் செயலாக இப்பாடல் இவள் வாயில் வந்ததா!" என்று நாராயணனும் ஆநந்தாவும் பிரமித் தார்கள்.

அடுத்த நிமிடம் அந்த பிச்சைக்காரர்கள் இவர்கள் வீட்டுப் பக்கம் வந்தார்கள். இவர்கள் வீட்டு வாசலில் அந்த அருமையான பாடலை முடித்தாள். ஆநந்தா அந்த பிச்சைக்காரப் பெண்ணைத் தன் வீட்டு வாசலில் நிற்கச் செய்து "பெண்ணே! இங்கு சற்று நின்று பாடு. கேட்கலாம்" என்ருள். அந்தப் பெண்ணும் அப் படியே பாடினாள்.

ஆநந்தா வெகு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்து

"உனக்கு அப்பாடல்களை எல்லாம் யார் சொல்லிக் கொடுத்தார்கள். எப்படிப் பாடம் செய்தாய்? உனக்கு இம்மாதிரி சாரீரம் அமைந் திருப்பது பூர்வ ஜென்மத்தில் நீ செய்த பூஜாபலனுகும். இந்த கிழவர் உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டாள்.

பிச்சைக்காரி :—அம்மா! ஏழை என்பது உலகத்தில் உண்டு. எல்லோருமே பிறக்கும்போது செல்வத்தைக் கொண்டு வருவதில்லை. ஆனல் எங்களைப் போன்ற ஏழைகள் உலகிலேயே இருக்கமாட் டார்கள். எனக்குள்ள கதிக்கும் பாட்டு சொல்லிக் கொடுப்பதுவும் ஒரு கேடா! எங்களுக்கு வசிக்க ஓர் சிறிய குடிசை கூடக் கிடையாது. சூரிய சந்திராதிகள் வர்ஸம் செய்யும் இடம் எல்லாம் எங்களுடை யதுதான். நான் இப்படி பிச்சைக்கு வரும்போது அங்கங்கே மகா ராஜர்களின் வீட்டில் பொட்டி பாடுகிறதே (கிராமபோன்) அதை வெகு ஆவலோடு கேட்பேன். அதிலிருந்து கற்றுக் கொண்டு ஏதோ வயிற்றுப் பிழைப்பிற்குப் பாடித் திரிகிறேன். இவர் என்னுடைய பாட்டனர். எனக்குத் தாயுமில்லை. தந்தையுமில்லை. எனக்கு இவர்தான் கதி. இவருக்கு நான் தான் கதி. எல்லோருக்கும் ஈசன் தான் கதி.

ஆநந்தா :—அப்படியா! பொட்டி பாடுவதிலா கற்றுக் கொண் டாய்? உனக்குச் சொந்த மனிதர்கள் யாருமில்லை என்றுல் உற்றர் உறவினர்கள்கூட யாருமில்லையா! தள்ளாத கிழவரையும் அறியாத சிறு பெண்ணுகிய உன்னையும் தெருத் தெருவாக அலைய விட்டு எல் லோரும் பார்த்துக் கொண்டிருக்கிறுர்களா!

பிச்சைக்காரி:—அம்மா! இந்த காலத்தில் மக்கள் மனிதர் என்ற விசுவாசமும் அன்பும் எங்கேனும் காட்டி ஆதரிப்பது உண்டா! அம் மாதிரி முன்வருபவர்களு மில்லை. வரக்கூடிய புண்ணியவான்களும் மகா பாவி எனக்குக் கிடையாது. அம்மணீ! நாங்கள் மிகவும் துர திர்ஷ்டக்காரர்கள். கடவுள் சோதனைக் கென்றே எங்களை ஒரு குடும் பமாகப் பிறப்பித்தார்போலும். நாங்கள் பந்துக்களால்...சிநேகிதர் களால் ஜாதிப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்கள்." என்று கூறும் போதே அவள் முகம் வேறுபட்டு விசனச் சுழலில் அகப்பட்டுக்

கொண்டு தவிக்கும் நிலைமையை விளக்கியது. கண்களில் நீர்த் தாரைகள் பிரவாகம் போல வந்தன. இரண்டு கண்களும் தெரியாத குருடன் கண்களிலும் நீர் வழிந்தது.

இதைக் கண்ட அவ் வாலிபனும் ஆநந்தாவும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள். இவருடைய மனதும் சற்று கலக்கத்தை யடைந்தது. ஆநந்தா அந்தப் பெண்ணை நோக்கி...அம்மா! நீங்கள் ப்ரஷ்டம் போடப்பட்டவர்களா! எதனுல் அத்தகைய கொடிய தண்டனையை அடைந்தீர்கள். காரணம் கூற முடியுமா?'' என்று வினயத்துடன் கேட்டாள்.

பிச்சை:—அம்மணீ! காரணத்தைக் கூறினுல் என்ன, கூருவிட்டால் என்ன! எங்கள் விதியும் கதியும் மாறப்போவது உண்டா! அதை யனுபவித்துத்தானே தீரவேண்டும். எனக்கு புத்தி தெரிந்த நாள் முதலாக இதே நிலைமையில் தானிருக்கிறேன். எங்கேனும் வேலை செய்து பிழைக்கலா மென்ருலோ இரு கண்களும் தெரியாத என் பாட்டனுரை நான் நெடுநேரம் விட்டுப்பிரிய நேர்ந்துவிடுகிறது. இவர் கதி மிகவும் கேவலமாகி விடுகிறது. இவருடைய அன்பு தான் எனக்குப் பிரதான மாகையினுல் இவருடன் கூடவே இருந்து காப்பதற்கு இந்தப் பிச்சைக்காரத் தொழிலைத் தவிர வேறு கதி இல்லை. நல்ல உத்தமமான வழியில் வயிறு வளர்க்க எந்த விதம் பாடு பட்டால்தான் என்ன. ஆகையினுல் பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டேன். கிடைத்தால் புசிப்பது, இல்லையேல் பட்டினி கிடப்பது...

அம்மா! என் பிதாவின்மீது அவருடைய பங்காளிகள் பொருமை கொண்டு அவரைக் கெடுக்க எண்ணி ஏதோ செய்யத் தகாத குற்றத்தைச் செய்துவிட்டதாகத் தக்க ஜோடிப்புகளுடன் தயார் செய்து அவரை தீவாந்திரத்திற்கு அனுப்பிவிட்டார்களாம். அந்த விசனத்தினுல் என் தாயார் தற்கொலை புரிந்து இறந்துவிட்டாளாம். எல்லாவற்றையும் ஆதாரமாகக் கொண்டு எங்களை ஆதியிலேயே பிரஷ்டம் செய்துவிட்டார்களாம். போதுமா! ஈச்வரனுக்கே எங்களிடத்தில் மனது இப்படி இருந்ததென்ருல் மனிதர்களுக்குக்

கூறவேண்டுமா!......அம்மணி! இந்த ஒரு வீட்டிலேயே நேரமாகி விட்டால் நாங்கள் இன்றும் பட்டினித்தான் கிடக்க நேரும். ஏதே னும் தயவு செய்யவேண்டும்.'' என்று கெஞ்சிக் கேட்டாள்.

அதே சமயம் தடபுடலான சில பெரிய மனிதர்கள் வைரமே ஜகஜ்ஜோதியாக மின்ன, ஆடைகள் தகத்தகாயமாக ஜொலிக்க, ஆட வர்களும் பெண்டிரும் மோட்டார் வாகனங்களில் அட்டகாஸமாக வந்து இறங்கினர்கள். அவர்களில் ஒரு பெண்மணி ஆநந்தாவை நோக்கிப் பரிகஸித்து நகைத்தவாறு "பேஷ்! ஆநந்தா! பிச்சைக்காரி யுடன் பேசிக்கொண்டு வீதியில் நிற்கிருயே! உனக்கு வெட்கமில்லை! எனக்கு மிகவும் வெட்கமாக விருக்கிறதே! அதோடு பிச்சைக்கார நாய்களுக்கெல்லாம் இவ்வாறு இடங் கொடுக்கலாகாது. ஒரு நாள் வாய் கொடுத்துவிட்டால் தினந்தோறும் வந்து குடலையறுப்பார்கள். விரட்டி யடித்து ஒட்டு......என்று சற்றும் இரக்க மென்பதே இல் லாமல் கடுமையாயும் பரிகஸித்து ஏளனமாயும் கூறினள்.

உடனே ஆநந்தா பதிலே பேசாமல் அவர்கள் சொல்வதை ஆமோதிப்பது போலச் சடக்கென்று அந்த தடபுடல் பேர்வழிகளை அழைத்துக்கொண்டு உள்ளே உல்லாசமாகப் போய்விட்டாள். பிச் சைக்காரிக்கு ஒரு தம்பிடியும் கொடுக்கவில்லை. போவென்றும் சொல்லவில்லை. வந்த ஆடவர்களின் அட்டகாஸத்தில் அந்த வாலி பனும் மறைந்தான்.

அந்தோ! பரிதாபம்...ஏதோ ஒரு வயிறு அன்னமிட்டு உபச ரிப்பார்கள் என்று தோன்றி நம்பி நின்ற பரதேசி பிச்சைக்காரிக்கு இந்த சொற்களும் செய்கையும் மனத்தை வாள் கொண்டறுத்தன. சில விநாடி நேரம் ப்ரமித்து செயலற்று நின்ருள். கண்கள் இரண் டும் பெரும் வெள்ளம் போல நீரைக் கக்கின. அச் சிறுமியின் மனம் பட்ட பாட்டைக் கூறவே சாத்யமன்று. தேனொழுகப் பேசிவிட்டு சடக்கென்று மறைந்துவிட்டதானது அந்தப் பாவையின் மனப் போக்கை நன்கு எடுத்துக் காட்டிவிட்டது...

விசனித்த குரலுடன் "தாதா! நட...'' என்று மெல்ல கூறிக் கொண்டே இரண்டடி எடுத்து வைத்தாள். இதைக் கேட்ட கிழவன்

"அம்மா ஏதேனும் போட்டார்களா!'' என்றான். "தாதா! போடுவதா? ஊம்...உனக்கு இன்னமும் ப்ரமை இருக்கிறதா? இங்கு நின்று இத்தனை நேரம் கத்தியதை வேறு சில வீடுகளுக்குப் போயிருக்கலாம்...இன்று நமக்குப் பிராப்தம் இவ்வளவுதான்.'' என்று சலிப்புடன் கூறிக்கொண்டே நடக்க வாரம்பித்தாள்.

கிழவனின் மனமும் பதைத்தது. "அட புண்யாத்துமாக்களே! ஒரு கை பிச்சை இட முடியாதவர்களா மணிக் கணக்கில் குழந்தையை நிற்கவைத்துக் கதறச் செய்தார்கள்!'' என்று கூறிக்கொண்டே சென்றுவிட்டான். பொழுதோ போய்விட்டது. காற்றில் விளக்கு அவிந்துவிடுகிறது. அதை ஏற்றிவைக்க வத்திக் குச்சி கிடையாது. இன்னிலைமையில் எழைப் பெண் என்ன செய்வாள் பாவம்!

தாதா! பொழுதோ போய்விட்டது. இன்று மூன்று பைசா கிடைத்திருக்கிறது. அதுதான் கடவுள் கொடுத்த பிச்சை. வானமோ கொடியவர்களின் நெஞ்சம் போல் தயை தாக்ஷண்யமின்றி கம்றலென்ற மேகத்துடன் வெகு வேகமாக கர்ஜித்துக் கொண்டு வருகிறது. ஆகையினால் நாம் இம்மட்டுடன் சென்று விடுவோம்.'' என்று கூறினாள்.

இதைக் கேட்ட கிழவரும் சம்மதித்தார். இவர்கள் திரும்பிப் போகும்போதும் அந்தப் பெண் தன் வழக்கப்படி பாடிக் கொண்டே சென்றாள்.

ஆணிலே பெண்ணிலே யென்போல வொருபேதை
யகிலத்தின் மிசையுள்ளதோ
வாடிய கறங்கு போலோடி யுழல் சிந்தையை
யடக்கி யொரு கணமேனும் யான்

காணிலேன் றிருவருளை யல்லாது மௌனியாய்க்
கண்மூடியோடு மூச்சைக்
கட்டிக்கலா மதியை மூட்டவே மூலவெங்
கனலினை யெழுப்ப நினைவும்

பூணிலே னிற்றைநாட் கற்றதுங் கேட்டதும்
போக்கிலே போகவிட்டுப்
போய்புகல ளுயினே ளுயினுங் கடையான
புன்மையே னின்னமின்னம்

வீணிலே யலையாமல் மலையிலக்காக நீர்
வெளிப்படத் தோற்றல் வேண்டும்
வேதாந்த சித்தாந்த சமரஸ நன்னிலைபெற்ற
வித்தகச் சித்தர் கணமே! —தாயுமான ஸ்வாமிகள்.

என்ற பாடலை அதி மனோகரமாகப் பாடிக்கொண்டே சில தெருக்கள் சென்றாள். பின்னும் இரண்டொரு காசு கிடைத்தது. அதைக் கண்டு சந்தோஷமடைந்தாள். பிறகு அவ்வூர்க்கோடியிலுள்ள விநயகர் கோயிலில் போய்த் தங்கினாள். தள்ளாத கிழவர் நடக்க மாட்டாது நடந்து சென்ற அலுப்பினால் அப்படியே கால்கள் துவண் "அப்பாடா! சர்வேசா! இன்னும் எத்தனை காலந்தான் என்னை இவ் விதம் ஆட்டப் போகிறாய்?"...என்று மனம் நொந்தவாறு படுத்தார்.

கிழவரின் களைப்பு அதிகப்பட்டதைக் கண்ட அப் பெண்மணி துடிக்கின்றாள். என்ன செய்வாள் பாவம். தன் கையிலிருந்த தகரக் குவளையை எடுத்துக்கொண்டு எதிரில் வெகு தூரத்தில் தெரியும் விளக்கு வெளிச்சத்தைக் கண்டு அந்த இடத்திற்கு ஓட்ட ஓட்டமாக ஓடினாள்.

அங்கிருந்த கிழ அம்மாளை நோக்கி "தாயே! ஒரு ஆத்மா களைப்பினால் அலைகிறது. ஒரு செம்பு குடிக்கும் தண்ணீர் வாருங்கள். மெத்த புண்ணியம் உண்டு" என்று கெஞ்சிக் கேட்டாள். இதைக் கேட்ட அந்தம்மாள் "ஐயோ! உபத்திரவமே!...இப்படித்தான் வெகு சாதுவைப் போல பிச்சை கேட்க வந்து முந்தின நாள் என் குழந்தையின் கைக் காப்பை ஒரு தடியன் கழற்றிக்கொண்டு போய் விட்டான். உலகத்தில் பிச்சைக்காரர்களின் தொல்லை சகிக்க முடியவில்லை. போடீ! நீ எதைக் களவாட வந்திருக்கிறாய்? இந்த இராக் காலத்தில் பிச்சைக்கு தைரியமாக இத்தனை சிறு பெண் வந்

ததிலிருந்தே தெரியுமடி!'' என்று விடுவிடு என்று கூறிவிட்டுக் கதவை பட்டார் என்று சாத்திக்கொண்டு போய்விட்டாள்.

அந்தோ! இளஞ் சிறுமி...பரிசுத்தமான மனத்துடன் கூடிய பாவை யாகையினுல் இந்த களங்கமான மொழிகள் அவள் இத யத்தைச் சலடைக் கண்கள் போலத் துளைத்துவிட்டன. குபீரென்று கண்ணீர் பொங்கி வழிந்தது. அடாடா!...இம்மாதிரியா மனந் துணிந்து அந்தஅம்மாள் கூறினுள்...ஹா...என் விதி...விதி என்று நொந்துகொண்டாள். யார் எதைச் சொன்னுலும் தனக்கு தற் போது வேண்டிய தண்ணீரைத் தேடிக்கொண்டு போகாவிட்டால் கிழவரின் கதி யாதாகுமோ!...என்கிற அச்சமும் கிலியும் உண்டா கியதால் மனத்தை யடக்கிக்கொண்டு மற்ருெரு வீட்டிற்குச் சென்ருள்.

அது ஓர் வைதீகரின் வீடு. அந்த சிறிய கூரை வீட்டில் ஓர் அம்மாள் நான்கு குழந்தைகளுக்கு முத்தத்தில் சாப்பாடு கலந்து போட்டுக்கொண்டிருந்தாள். நடைக் கதவு பாதி சாத்தி இருந்தது. நமது பிச்சைக்காரப் பெண் அந்த கதவுக்கு வெளியில் நின்று கொண்டு ''அம்மா! தாயே! ஒரு ஆத்மா தாகத்தினுல் தவிக்கின்றது. ஒரு செம்பு ஜலம் கொடுத்தால் மிகவும் புண்ணிய முண்டு. தாயே! என்று வெகு வணக்கமாயும் உருக்கமாயும் கேட்டாள்.

இந்த தீன குரலைக் கேட்ட உடனே சாதம் போடும் அந்த அம்மாள் அடுத்த வினுடியே பெரிய சீற்றங்கொண்ட புலி போல தத்திக் குதித்து ''ஐயோ! இதென்ன அனியாயம்! சோறு போடு வதை யாரோ பள்ளிச்சி பார்த்து விட்டாளே! யாரடீ தடி முண்டை! ......காலையிலும் பிச்சைக்கார உபத்திரவம்; மாலையிலும் பிச்சைக் காரர்களின் தொல்லை; இரவிலுமா பாழாப்போன பிச்சைக்காரர் களின் இழவு. ஐயோ! சனியனே! பிராம்மண வீடு என்ற அறிவு கூடவா கெட்டு விட்டது. இத்தனை சோறும் பாழாய்ப் பூட்டுதே!'' என்று ப்ரமாதமாகத் திட்டிக் கொண்டே ஆவேசங் கொண்டவளைப் போல எழுந்து அந்த சோற்றை அப்படியே தெருவில் கொண்டு போட்டாள்,

அதே சமயம் உள்ளே இருந்த ஒரு கிழவன் வேகமாக வந்து கையிலிருந்த தடியினால் இந்த பிச்சைக்காரப் பெண்ணை அவள் சற்றும் எதிர்பாராதவிதமாக தபால், தபால் என்று நாலைந்து அடிகள் அடித்து "பேமானி முண்டை! பாப்பார வீடுகளில் திடும் திடும் என்று நுழைந்து நஷ்டத்தை உண்டாக்குகிறாயா! சீச்சீ... வெட்கங்கெட்ட பிச்சைக்கார நாயே! பாப்பார வீட்டுக்குள்ளே வாக் கூடாதென்கிற புத்தி இல்லையா?...என்று தாறுமாறாகத் திட்டினார்.

இந்த எதிர்பாராத விபரீதத்தைக் கண்டு மனம் சகியாமலும் அடியினால் தேகம் தழும்பு பட்டும்போய்விட்டது. கண்ணீர் மாலை மாலையாகப் பெருகுகிறது. "அம்மா! நான் திருடுவதற்காக வரவில்லை. பிராம்மணாள் சாப்பிடுவதைப் பார்த்துக் கெடுக்கவேண்டுமென்று வர வில்லை. ஒரு குவளை தண்ணீருக்கு வந்தேன். அதற்காகவா என்னை இப்படிச் செய்வது? கடவுள் ஒருவர் இல்லையா! உங்கள் மனத்தில் ஈ விரக்கமில்லையா? ஏழைப் பரதேசி என்கிற எண்ணமும், தயை யும் இல்லாவிடினும் இப்படியா என்னை யடித்து உபத்திரவிக்க வேண்டும்?

ஐயா! உயர்தரப் பிராம்மணாக, மேன்மை குலத்தினராக இருக்கலாம். நான் பிச்சைக்கார நாயினும் கடையவளாக இருக்க லாம். என்னை எத்தனை கேவலப்பட்டவளாக நீங்கள் நினைத்தாலும் நம்மிருவரையும் ஒன்றாகப் படைத்த கடவுள் ஒருவன்தான். அவ னுக்கு வித்யாசம் எதுவும் கிடையாது. எல்லோரையும் ஒன்றாகப் படைத்ததுபோலப் பசி தாகம், உணர்ச்சிகள், முதலிய சகலமும் ஒன்றாகவேதான் சகல ஜீவராசிகளுக்கும் மனிதர்களுக்கும் வைத் திருக்கிறான் என்பதை மறக்காதீர்கள்.

ஒரு வாய் தண்ணீருக்காக வந்த என்னை இரு கண்களிலும் தண்ணீர் தாரையைப் பெருக்கிய புண்ணியம் செய்தீர்கள்...உம்... என் விதி...என்று விசனமே வடிவமாய்க் கண்ணீர் பெருகியவாறு கூறிக்கொண்டே நிற்காமல் போய்விட்டாள். மனமோ விசனத்தி னாலும் கிழவருடைய பரிதாபத்தினாலும் கலங்கித் தத்தளிக்கின்றது. மீண்டும் ஓடிப்போய் கிழவரைப் பார்த்தாள்.

கிழவர் அடித்துப் போட்ட பாம்பு போலச் சோர்ந்து உணர்வற்றுக் கிடக்கிறார். சிறு பையன் பக்கலில் உட்கார்ந்து பசியால் தவித்துக்கொண்டிருக்கிறான். இவ் விரண்டு கோர காட்சியையும் கண்ட அப் பெண்ணின் இதயமே வெடித்துவிடும் போல ஆய்விட்டது. அந்தோ! இத்தனை பெரிய பரந்த உலகத்தில் ஒரு ஆத்மாவுக்கு ஒரு வாய் தண்ணீர் கிடைக்கப் பஞ்சமாகிவிட்டதே! என்ன கொடுமை ...ஈச்வரா!...என்று பதைத்துத் தவித்து தண்ணீருக்காகக் கண்ணீர் வடித்துக் கலங்கிவிட்டாள்.

---

## 2-வது அதிகாரம்

## கருணையற்ற உலகம்—தருணியின் கலக்கம்

உலகமே பணத்தினாலும், நவநாகரிகத்தினாலும், படாடோபத்தினாலும் மூடப்பட்டு மக்களை மயக்கித் தன் வயப்படுத்திக்கொண்டிருக்கிற இக்காலையில் ஏழைகளையும் பிச்சைக்காரர்களையும் கவனிக்கவும் ஆதரவளிக்கவும் மேல்படி பைசாசங்கள் மக்களை விடுமா! ஒருபோதும் விடாது. "ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில் இழிவு கொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே" என்று கவியரசர் பாரதியார் கூறிய பொன் மொழி நம் நாட்டில் என்று ஊர்ஜிதமாகி மக்கள் பரிபக்குவமடைந்து வேற்றுமையை விடுத்து ஒற்றுமை அடைவார்களோ அன்றுதான் நிரந்தரமான சந்தோஷமும், இன்பமும், பரஸ்பர ப்ரீதியும் க்ஷேமமும் உண்டாகும். அதுவரையில்....'

பட்டவர்த்தனமாய் படாடோபமாக மோட்டாரில் வந்து இறங்கிய மனிதர்களின் மயக்கி லீடுபட்டு அவர்கள் கூறியதைக் கேட்டு அதை ஆமோதித்ததே போலச் சரேலென்று உள்ளே சென்றுவிட்ட ஆனந்தாவும் வாலிபனும் வந்த விருந்தினர்களுடன்

வெகு குதூகலமாகப் பேசிகொண்டு களிக்க வாரம்பித்தபிறகு வீதியில் பசியால் வருந்திய ஏழைப் பிச்சைக்காரியின் நினைவு எப்படி இருக்க முடியும்? அதை அறவே மறந்தார்கள்.

விருந்தினருக்குக் காப்பியும், பலகாரமும், பழ வகைகளும், சோடா கலர்கள் வகைகளும் ஏராளமாக வாங்கிக் கொடுத்தார்கள். நாகரிகத்தில் தேர்ந்த தனவந்தர்களில் பலர் பிறர் வீட்டில் கொடுக்கும் பண்டங்களை முற்றிலும் உண்டு பசி தீர்த்துக்கொண்டால் அது அகௌரவம், அநாகரிகம், நாட்டுப்புறத்து மவுட்டீக ஜனங்களின் செய்கையைப்போலாகிவிடும்; ஆதலால் கயாவாளிகளைப் போல ஒவ்வொன்றையும் எடுத்து ஒரு துளி ருசி பார்த்து எச்சில் செய்து வைத்துவிடுவதுதான் நாகரிகம். அதுதான் பெரிய மனிதர்களின் கண்ணியமான் செய்கை என்ற மனோபாவங் கொண்டவர்களாகவே இருக்கிறார்கள். இது நாகரிகப் பேயின் திருவிளையாடலாகும்.

இங்கு வந்துள்ள சீமாட்டிகளும் சீமான்களும் கரை கண்ட நாகரிகமானவர்களாயிற்றே! அவர்கள் பக்ஷணங்களைக் காலி செய்வார்களா! சிலவற்றை ருசி பார்த்தார்கள். சிலவற்றை வாசனை பார்த்தார்கள். சிலவற்றை ஒரு துண்டு...இரு துண்டுகள் புசித்தார்கள். மொத்தத்தில் எல்லாவற்றையும் எச்சில் செய்தார்கள். (பஸ்) போதும் என்று கையைக் கழுவிவிட்டார்கள்.

வந்த மனிதர்களோ ஐந்தாறு பேர்கள்; வாங்கிய பண்டங்களின் தொகையோ கிட்டத்தட்ட நான்கு ரூபாய்க்கு மேலாகும். சாப்பிட்ட அளவோ கால் ரூபாய்கூட இருக்காது. இதை வீண் டம்பம் என்பதா! அபரதண்டமென்பதா! நவநாகரிகத்தின் லீலைகள் என்பதா! எச்சில் செய்துவிட்ட பண்டங்கள் வேலைக்காரர்களுக்குக் கூட உதவாது குப்பைத் தொட்டியில் போய்விடுகின்றன. இம்மாதிரியான ஆடம்பரத்தினால் எந்த தெய்வத்திற்குப் பிரீதியாகும்?

பின்னர் எல்லோரும் சங்கீத விருந்து நடத்தினர்கள். அதன் பிறகு வந்த டாம்பீகர்கள் வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள். ஆநந்தாவும் வாலிபனும் அவர்களை வழியனுப்ப வீதியில் வந்தபோது

தான் பிச்சைக்காரியின் ஞாபகம் உண்டாகியது. இத்தனை நேரத்தில் அவர்கள் எந்த தெருவுக்குச் சென்றிருப்பார்களோ!...ஐயோ! பாவம் ஒரு பிடி அரிசியும் சில்லரையும் கொடுக்க எண்ணினேன். அவர்களால் அதுவும் போய்விட்டது. அடேய் முருகா! அடுத்த தெருவில் அந்த பிச்சைக்காரப் பெண் இருக்கிறாளாவென்று பார்த்து இந்த பலகாரங்களைக் கொண்டு கொடுத்துவிட்டு வாடா! வீணாகப் போகிறது'' என்று வேலைக்காரனுக்குத் திட்டமிட்டாள்.

அச்சமயம் அங்கு வந்த அவளுடைய சினேகிதை யொருத்தி நகைத்துக் கொண்டே "பேஷ் ஆநந்தா! எத்தனை நொந்தவளாக இருப்பினும் எச்சிலையும் குப்பை கூளத்தையும் சாப்பிட மனமிசைய மாட்டாள் என்பது நினைவிருக்கட்டும். நான் பக்கத்து வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டுதானிருந்தேன். பிச்சைக்காரிக்கு ஒரு பிடி யரிசி போட வேண்டாமென்றும் அவர்களை வீட்டில் சேர்க்கக் கூடாதென்றும் பெரிய ப்ரஸங்கம் செய்த அவர்களால் உனக்கு இப்போது லாபமா, நஷ்டமா பார்த்தாயா! நான்கு ரூபாய்கள் செலவு செய்தாய். ஒரு ப்ரயோஜனம் உண்டா! புளியேப்பக்காரருக்கு விருந்து வைப்பதானது நிறைந்துள்ள பாத்திரத்தில் சாமானைக் கொட்டுவது போலத்தானாகும்.

அந்த ஏழைப் பிச்சைக்காரிக்கு ஒரு குவளை சோறும், சோற்றுத் தண்ணீருமாக வார்த்திருந்தால் அவள் அதைக் குடித்து மனமாறக் களித்திருப்பாளல்லவா! இவைகளெல்லாம் வீண் டம்பத்திற்காகப் பாடுபடும் தண்டங்களில் ஒன்று. பிச்சைக்காரி பட்டினி கிடந்தாலும் கிடப்பாளே யன்றி எச்சிலைத் தின்னமாட்டாள். எச்சில் என்று தெரியாமல் கொடுத்தால் அது பாபமல்லவா! அவ்விதம் செய்வது மிகவும் பிசகு. அதைவிட நீ பேசாமலிருப்பது நல்லது...... என்றாள்.

இந்த வார்த்தைகளும் அவற்றின் பொருளும் இவர்களுடைய மனத்தில் நன்றாகப் பதிந்து வருத்தத்தை யுண்டாக்கின. "அடாடா! கண் தெரியாத கபோதி......சிறு பையன்......இளம் மங்கை...... மூவரையும் வெகு நேரம் வரையில் காக்க வைத்துப் பாட்டுகளையும்

பாடச் செய்துக் கேட்டுவிட்டு ஒரு தம்பிடியும் கொடுக்காமல் போய் விட்டோமே! ஆகா! என்ன காரியம் செய்தோம். அந்த பிச்சைக் காரப் பெண் என்ன நினைத்தாளோ! எவ்விதம் வருந்திக் கொண்டே சென்றுளோ!'' என்ற ஒருவிதமான இரக்க உணர்ச்சி உதயமாகி மனத்தை வருத்தியது.

பணத் திமிராலன்றோ இவ்விதம் செய்தாள் என்று அந்தப் பிச்சைக்காரி கட்டாயம் நினைத்திருக்கக் கூடும். ஒரு காசு கொடுக் கக்கையை மறித்தவர்களுக்கு நான்கு ரூபாய்களைச் செலவு செய்து பாழ் படுத்தினேமே. அதில் பத்திலொன்றை அந்த பிச்சைக்காரிக்கு கொடுத்திருந்தால் எவ்வளவு சந்தோஷப்பட்டுத் திருப்தியடைந்திருப் பாள். உம்......அறியாமை......மதியின்மை......என்று வருந்திய வாறு அந்த பிச்சைக்காரியின் ஞாபகமாகவே தம்பித்துவிட்டாள். "அந்த பிச்சைக்காரியை எங்கு பார்த்தாலும் இங்கு அழைத்துக் கொண்டு வாடா!'' வென்று வேலைக்காரனுக்கு உத்திர விட்டாள். அவளது செய்கை அவள் மனத்தையே தாக்கவாரம்பித்தது.

* * * * *

தண்ணீருக்காகச் சென்று கண்ணீருங் கம்பலையுமாகத் திரும்பி வந்து ஓரே விசனமும் கலக்கமும் அடைந்து நின்று விட்ட பிச்சைக் காரப்பெண் தன் பாட்டனாருகில் சென்றுள். "தாதா! உங்க ளுக்கு என்ன செய்கிறது? உடம்புக்கு என்ன......பேச முடிய வில்லையா! இதோ பாருங்கள்......கண்ணைத் திறவுங்கள்.'' என்று கண்ணீர் பெருகியவாறு கேட்கிறுள்.

கிழவர் கண்ணைத் திறக்க முடியாது களைப்பு மேலிட்டால் தவிக்கின்றுர். நாவரட்சியினுல் தொண்டை வரண்டு நாக்கு உலர்ந்து விட்டதால் பேசமுடியவில்லை எனினும் தன்மீதுள்ள அன்பினுல் மனங்கலங்கிக் கூறும் மொழிகள் செவிகளில் விழுகின்றன. என்ன செய்வார் பாவம்! கையினுல் தீர்த்தம் வேண்டு மென்று சைகை காட்டினர்.

இதைக் கண்ட அந்தப் பெண்ணின் தவிப்பு அதிகரித்து முன்னிலும் பதின்மடங்கு விசனத்தையும் வேதனையையும் அளித்து

வாட்டுகிறது. சிறு பையனும் சோர்ந்து விட்ட கண்ராவி சகிக்க முடியவில்லை. தள்ளாத கிழப்பிராணனும், இளந்தளிர் போலான குழந்தையின் பிராணனும் இன்று தண்ணீரில்லாமல் பறந்து தான் போய்விடப் போகின்றன. இரண்டு உயிர்களை பலி கொடுக்கும் பெரும் பாவம்தான் தன்னை வந்து சூழப்போகிறது. என்ற அபாரமான திகிலும் வேதனையும் உண்டாகிவிட்டன.

கடவுளைத் தோத்திரம் செய்து கொண்டே மீண்டும் குவளையை எடுத்துக் கொண்டு ஓட்டமாக ஓடினாள். இருட்டு நன்றாகக் கருக்கலாகிவிட்டது. எங்கு சென்று யாரைக் கேட்பதென்று தோன்றாது தவிக்கிறாள். அவள் ஓடும் ஓட்டத்தில் கந்த உடையும் காற்றில் பறந்து இன்னும் கிழிகின்றது.

அச்சமயம் கையில் ஒரு லாந்தர் எடுத்துக்கொண்டு தோள்மீது ஒரு குடலையை மாட்டிக்கொண்டு ஒருவன் எதிரே வருவதை விளக்கு வெளிச்சத்தால் தெரிந்துகொண்டு அவனையே நாடி ஓடி, அவன் எதிரில் அழுத கண்ணும் தொழுத கரமுமாக நின்றாள். தான் சற்றும் எதிர்பாராத விதமாக ஒரு பெண் இருட்டில் புலம்பிக்கொண்டு வழி மறித்து நிற்பதைக் கண்ட அந்த புஷ்பக்காரன் "யாரம்மா! என் என்னை வழி மறித்துக் கும்பிடுகிறாய்? விஷய மென்ன?" என்று வெகு வணக்கமாகக் கேட்டான்.

பிச்சை :—ஐயா! நான் ஒரு பரதேசி. பிச்சைக்காரி, ஒரு வேளை கஞ்சிக்குப் பஞ்சாய்ப் பறக்கும் ஏழை. இன்று இருந்த ஊரில் நாளை இராமல் நாங்கள் எத்தனையோ ஊர்களைச் சுற்றிப் பார்த்திருக்கிறோம். ஆபத்திற்குத் தண்ணீருங் கொடுக்காத மகா கர்மிகள் நிறைந்த இந்த ஊரைப்போல நான் பார்த்ததே இல்லை. என் பாட்டனார் உயிர் போய் விடும்போலத் தவிக்கிறார். ஒரு வாய்த் தண்ணீருக்கு ஒரு இடத்திற்குச் சென்றேன். தடியாலடித்துத் திட்டாததும் திட்டியனுப்பிவிட்டார்கள். எல்லாம் ஈசனின் சோதனை. எப்படியாவது ஒரு வாய்த் தண்ணீர் எனக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும். இந்த இருட்டில் குளம், கிணறு இருக்குமிடமும் தெரியவில்லை. தயவு செய்ய வேண்டும். ஏழைப் பரதேசிக்கு இரங்க வேண்டும்.'' என்று கல்லும் கரையும்படிக்குக் கூறினாள்.

இதைக் கேட்ட புஷ்பக்காரன் மிகவும் வருத்தப்பட்டு "அப்படியா! ஒரு வாய்த் தண்ணீர் கூடக் கிடைக்காத கர்மி கிராமமா இது! ஐயோ! இந்த நள்ளிருளில் நீ இப்படித் தன்னந்தனியாக ஓடுவது சரியல்ல. அம்மா! அதோ சமீபத்தில் ஒரு கள்ளுக் கடை இருக்கிறது. அங்கு சதா குடியர்களின் தாண்டவம் நடந்து கொண்டே இருக்கும். அவர்களால் உனக்கு ஏதேனும் ஆபத்து நேரும். நீ இப்படியே திரும்பி விடு. நான் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறேன்" என்று மரியாதையுடனும் சாந்தமாயுங் கூறிவிட்டு அவள் கையிலிருந்த குவளையை வாங்கிக் கொண்டு சிறிது தூரம் சென்றான்.

அங்கு ஒரு பெரிய துறவு இருந்தது. தைரியமாக அதிலிறங்கி ஒரு குவளை ஜலம் மொண்டு வந்து இவளிடம் கொடுத்து "அம்மா! இதைக் கொண்டு உன் பாட்டனுருக்குக் கொடு. நான் போக வேண்டும். பக்கத்துக் கிராமத்து மிராசுதாரர் வீட்டில் நாளைய தினம் விவாகம். அதற்காக புஷ்பம் கொண்டு போகிறேன். நீ தனிமையில் இங்கு வராதே!" என்று கூறி விட்டுப் போய்விட்டான்.

அளப்பரிய சந்தோஷத்துடன் தண்ணீரை வாங்கிக் கொண்டு அவனுக்கு வந்தனங்கள் செய்துவிட்டு ஓட்ட ஓட்டமாக ஓடி வந்தாள். கோயிலின் முன்பு வந்ததும் திடுக்கிட்டுக் கதி கலங்கினாள். "ஐயோ! தாதா எங்கே காணவில்லையே! தாதா! தாதா!......இத்தனை பலஹீனமான நிலைமையில் அவரால் நகரவும் முடியாதே! அவர் எப்படி நடந்திருக்க முடியும்......சின்னதம்பீ! சின்னதம்பீ!" என்று கூவி யழைத்தாள். பதில் ஒன்றுங் காணவில்லை.

இருட்டோ கருக்கலாக விருக்கிறது. மனதோ தத்தளித்துருகுகின்றது. அந்த பிள்ளையார் கோவில் மிகவும் சிறிது. அதன் முன் பக்கத்து மண்டபம் சுமார் நான்கு பேர்கூட இருக்க முடியாத அத்தனை சிறியது. அந்தப் பக்கம் முற்றும் இருட்டில் சுற்றிப் பார்த்தாள். எவ்வித சந்தடியும் தெரியவில்லை. காற்றினால் மரங்கள் அசைந்து கிளைகள் ஒன்றோடொன்று உராயும் சலசலப்பான ஓசையும், அம்போ வென்ற நிச்சப்தத்தின் பயங்கரமும் இச்சிறுமியின் மனத்தை வாட்டிவிட்டன,

தாங்கமாட்டாத விசனத்துடன் "தம்பி! தம்பி!" என்று பன்முறை யழைத்தாள். சிறிது தூரத்திலிருந்து "அக்கா! அக்கா! இங்கே வா! இங்கிருக்கிறேன்" என்று ஒரு அழுத குரல் மெல்லியதாகக் காதில் விழுந்தது. மரங்களும் செடிகளும் அடர்ந்திருக்கும் அந்த இடத்தில் இக்குரலைக் கேட்டவுடன் அப்பெண்மணி நிதி கண்டது போன்ற சந்தோஷத்துடன் "தம்பி எங்கே இருக்கிறாய்? தாதா இருக்கிறாரா?" என்று கூவிக்கொண்டே மரங்களில் இடித்துக்கொண்டும், காலில் முள் தைப்பதைத் தாங்காமல் அதை எடுத்து எறிந்து கொண்டும், ஏற்கெனவே கந்தலான உடைகள் இன்னும் செடியில் மாட்டிக் கொண்டு கிழியவும் பரம வேதனையை பட்டுக் கொண்டு மெல்ல தட்டித் தடுமாறி தம்பி இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

சிறு பையன் கோவென தேம்பித் தேம்பி யழுதுகொண்டே இருக்கிறான். ஆகாய வட்டத்தினால் உண்டாகும் சிறிது வெளிச்சமும் மேகத்தினால் மறைக்கப்பட்டு விட்டதால் அந்த இடத்தின் பரிதாபத்தைச் சொல்ல முடியவில்லை. சின்னம்மாள் என்கிற அந்த பிச்சைக்காரப் பெண் கண்ணீர் பெருகியவாறு முதலில் சிறுவனை அணைத்துக்கொண்டு "தாதா எங்கே? தாதாவும் நீயும் ஏன் இங்கு வந்தீர்கள்? எப்படி வந்தீர்கள்! கண்ணே அழாதே!"...என்று சமாதானம் செய்தபடியே கிழவர் படுத்திருந்த இடத்தைத் தடவிக் கண்டுபிடித்து அவருடைய தலையைத் தன் மடிமீது போட்டுக்கொண்டு தண்ணீரை மெல்ல வாயில் வார்த்தாள். கண்ணிலும் முகத்திலும் தெளித்தாள்.

கிழவர் தண்ணீரைக் குடித்ததும், வாயில் பெருகிவிட்டதும் தெரியவில்லை. அவள் மனம் படும் பாட்டை விவரிக்க முடியுமா! தம்பி புலம்பிக்கொண்டே, "அக்கா!...நீ போனபிறகு நான் களைப்பாகப் படுத்திருந்தேன். யாரோ இருவர் கையில் விளக்குடன் பிள்ளையார் கோவிலுக்கு வந்தார்கள். அவர்கள் தாதாவை உற்று உற்று கவனித்துப் பார்த்தார்கள்.

அதிக கோபங்கொண்டு என்னை இழுத்துச் சீறி விழுந்து,

“ஏ மடப்பயலே! இது சாமி கோவில் என்பது தெரியவில்லையா? இதோ இந்தக் கிழவன் சாகப்போகிறான். இவன் சாமி கோயிலில் செத்துக் கிடந்தால் என்ன செய்வது. சாமியும் கோயிலும் யாவும் தீட்டாகிவிடாதா! சாமிக்கு புண்யாவாசனமும், ப்ரோக்ஷணமும் செய்தாலன்றி தீட்டு கழியுமா! அதற்கெல்லாம் சிறிய ஏழைக்கோயிலுக்குப் பணமேது? புத்திகெட்ட முண்டமே! இந்த கிழவன் சாவதற்கு இதுதானடா இடம். வேறு இடங் கிடையாதா! நீ யாரடா மொட்டைப் பையன். நீங்கள் இங்கு எப்படி வந்தீர்கள்?” என்று தாறுமாறாக இன்னும் ஏதேதோ திட்டியபடியே அந்த இரண்டு பேரும் தாதாவை எழுப்பிப் பார்த்தார்கள்.

ஒருவன் மார்பில் கையை வைத்துப் பார்த்தான். “அடேடே உடனே அப்புறப்படுத்திவிடவேண்டும்” என்று கூறிக்கொண்டே அவ்விருவருமே தாதாவைத் தூக்கிக்கொண்டு வந்து இந்த மரத்தடியில் விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நான் எத்தனையோ கத்தினேன்; அழுதேன். எங்கக்கா வருவா ளென்றும் சொன்னேன். அவர்கள் அதைக் காதிலேயே வாங்கவில்லை. சாமி தீட்டாகிவிடும் என்ற வார்த்தையை விட்டு வேறு பேசவில்லை. நீயும் இன்னும் வரவில்லையே என்று அழுது அழுது மூஞ்சியே வீங்கிவிட்டது.

அக்கா! தாதா செத்துப்பூடுவார் என்று அவர்கள் சொன்னார்களே! தாதா செத்தாபூடுவார். தாதா ஏன் திடீரென்று எப்படி செத்துப்பூடுவார். தண்ணீர் வார்த்தால் பிழைக்கமாவிடாரா! ஐயோ! எனக்கு என்னமோ செய்கிறதே! தாதா இறந்துவிட்டால் பிறகு நமக்கு யார் துணை? நாம் என்ன செய்வது? யாரை தாதா வென்று கூப்பிடுவது? அக்கா!...தாதா...பிழைத்துக்கொள்வாரா!......செத்துப்போகமாட்டாரே!...தண்ணீர் குடிக்கிறாரா?”...என்று பரிதாபம் சொட்டக் கேட்டுக் கோவெனக் கதறுகிறான்.

ஏற்கெனவே மனம் தத்தளித்து நிற்கும் சின்னம்மாளுக்கு இந்த வரலாறுகள் எரிகிற அடுப்பில் எண்ணெயை ஊற்றுவதுபோல இன்னும் அபாரமான விசனத்தையும் துக்கத்தையும் கிளறிவிட்டன. தன் தாதா ஒருவரே தனக்குப் புதையல் போல விருப்பவர் அவரும்

போய்விட்டால் என்ன செய்வது என்ற துக்கம் கரை புரண்டு ஓடு கிறது. அந்த மனிதர்கள் சற்றும் ஈவிரக்கமற்றுச் சாகுந் தறுவாயி லிருப்பதை யறிந்தும் இங்கு இவ்வாத்மாவைக் கொண்டு போட்டு விட்டதையும், சாமி தீட்டாகிவிடுவார் என்று கூறியதையும் நினைக்க மனத் துயரம் பொங்குகிறது.

"ஹா! என்னே! உலகம்! என்னே உலக வாழ்க்கை! என்னே மாய ப்ரபஞ்சம்! உலகம் முற்றும் ஆக்குதலும் அழித்தலும் ஈசன் செயல். அத்தகைய ஈசனின் சிருஷ்டியில் எத்தனை மாறுதல்கள். எத்தனை விசித்திரங்கள்! எத்தனை வினோதங்கள்...சேச்சே! ஒரு ஆத்மா தவிக்கும்போது அதைக் கவனிக்க மறந்துவிட்ட இரும்புக் கட்டைகள் ஈசனை அப்படியே த்ருப்தி செய்துவிடப் போகிறார் களாம்.

'பகவானிடம் அன்பாயிருப்பதைவிட பகவானால் சிருஷ்டிக்கப் பட்ட மக்களிடம் அன்பாக இருப்பதே அந்த பகவானுக்குப் பரிபூர்ண மான த்ருப்தி எனப்படும்; கருணையும் உண்டாகும் என்று என் பாட்டனார் அடிக்கடி கூறுவதைக் கேட்டிருப்பது இப்போது நினை விற்கு வருகிறது.

அந்தோ! திக்கின்றி பரிதாபகரமாய் ஒரு ஜீவன் தவிப்பதைப் பார்த்தும் இவர்கள் உதவி செய்ய முன் வராது இந்த இருளில் தூக்கி எறிந்துவிட்டுச் சென்ற இவர்களா தெய்வ பக்தர்கள்! இவர் களா ஈசனைக் காத்து ரக்ஷிப்பவர்கள். இவர்களா மனித வர்க்கத்தைச் சார்ந்தவர்கள். ஒரு ஆத்மாவிடத்தில் இரக்கங் காட்டாத இந்த கர்மிகளிடத்தில் கடவுள் எப்படி இரக்கங் காட்டுவார்...

நானும் கேவலம் முட்டாளாய் பிச்சைக்காரியாகத் தெருவில் அலையும் பறைதையா யிருப்பினும் அவ்வப்போது எனக்கு நல்ல விஷ யங்களையும் கதைகளையும் உபதேசித்து வந்த என் தாதாவின் உப தேசத்தினால் என் மனத்தில் ஏதேதோ தோன்றுகின்றதே! இம் மாய ப்ரபஞ்சத்தில் மனிதர்கள் நன்றாக வாழவேண்டுமாயின் பணம் தான் ப்ரதானம். இல்லையேல் உயிருடன் இருப்பவர்களும் பிணமா கவே பிறருக்குத் தோன்றுகிறார்கள்........

தாதா!...தாதா!......களைப்பு தெளிந்ததா! இன்னும் ஜலம் வேண்டுமா!...ஐயோ பேசவே இல்லையே! மார்பு மட்டும் சற்று படபடப்பாக இருப்பதால் உயிரிருப்பதாகத் தெரிகிறது. மற்றபடி உயிரே தெரியவில்லையே! தாதா!...அனாதைப் பரதேசி போன்று எங்களை இம் மாய மண்ணில் விட்டுத் தாங்கள் மறைந்து விடுவீர்களோ!......ஐயோ! நாங்கள் என்ன செய்வோம். பாதுகையை வைத்துப் பரதன் பூஜித்தது போலத் தங்களை வைத்துப் பூஜித்து வருகிறோமே! கண் திறந்து பாருங்கள்.—''

என்று கதறுகிறாள். இருட்டோ கறுக்கலாக மூடிக்கொண்டது. பளிச் பளிச்சென்ற மின்னலும் ஆரம்பித்துவிட்டது. மெல்ல மெல்ல சிறியதாக இடித்துப் படபட வென்று பெரிய இடிகளும் பயங்கரத்திலும் பயங்கரமாக சப்தித்துக்கொண்டு பெரு முழக்கம் செய்கின்றன. இந்த நள்ளிருளில் இக் கிழவருடன் மனம் பதறிக் கதறித் தவிக்கும் சமயம் இந்த இடியும் மின்னலும் சின்னம்மாளின் மனத்தைக் கலக்குகின்றன.

சின்னதம்பியோ அலறி அலறி யழுது அக்காவை கட்டிக் கொண்டு கண்ணை கெட்டியாகப் பொத்திக்கொண்டு வீற் வீற் என்று புலம்புகின்றான். என்ன செய்வாள் சிறு பெண்மணி...என்ன சோதனை...இத்தனை ஆர்ப்பாட்டத்தின் பலனாக எத்தனை பெரிய மழை பெய்யப்போகிறதோ தெரியவில்லையே! இந்த நடுக் காடான இடத்தில் நான் என்ன செய்வேன்? ஈசா! உனது கண்ணுமா மூடி விட்டது! உன் கருணை சாகரமுமா வரண்டு உலர்ந்துவிட்டது. உனது மனமுமா கல்லினுங் கொடிய கடினமாகிவிட்டது...ஐயோ!... பயமாக விருக்கிறதே! என்ன செய்வேன்?'' என்று அலைந்து துடிக்கிறாள். சிறு தூறலும் ஆரம்பித்துவிட்டது. குழப்பமும் விசனமும் கப்பிக்கொண்டு அப்படியே வதைத்துக் கொன்றுகொண்டிருக்கின்றன. செய்வதறியாது தவிக்கிறாள். தங்கமாட்டாத விசனத்தினால் அப்படியே மரத்தின் மீது சாய்ந்தாள். ஸ்மரணையற்றாள். என்ன கோரமான காட்சி...என்ன அநியாய உலகம்!

## 3-வது அதிகாரம்

## உதவிக்குப் பலன் உதையும் குத்தும்

உலகமே இருள் மயமாகிவிட்டது. இயற்கை தேவியே அமைதியை இழந்து சண்டமாருதத்தில் அல்லல் படும்போது உலகத்திலுள்ள எப்பொருள் தான் அமைதியுடன் வாழமுடியும்? வாயுபகவான் அதிக ஆக்ரோஷத்துடன் கிளம்பி ஒவ்வொரு மரத்தையும் கிளையையும் உலுக்கு உலுக்கென உலுக்கி வேருடன் சிலவற்றையும் கிளைகிளையாகச் சில வற்றையும் கீழே தள்ளுகிறான். மரத்திலிருந்து காயும் கிளையும் மட்டையும் கட்டையும் தடார் புடார் என்று விழும் ஓசையோ உள்ளுக்குள் அடக்கமாய் கம்பளிப் போர்வையுடன் கட்டிலில் படுத்திருக்கும் எல்லோரையும் திடுக்கிட்டலறச் செய்கின்றதென்றால் மரத்தடியிலேயே உட்கார்ந்திருக்கும் பிச்சைக்கார குடும்பத்தின் நிலைமையை, சின்னம்மாளின் துயரத்தைக் கூறவேண்டுமா? நெருப்பின்மீது புழுகெனத் துடிக்கின்றாள்.

மிகவும் அவசியமான சமயம் வந்துவிட்ட காலத்தில் பல நாள் படுக்கையுடன் கிடந்த ரோகிக்குக் கூட வேலையின் நிமித்தம் தன்னை மீறிய ஒரு சக்தியும் பலமும் உண்டாகி விடுவதையும், பெண்களுடைய தளர்ந்த நிலைமையிலும் ஆனையின் பலம் வந்துவிடுவதையும் பிரத்யக்ஷமாகக் காண்கின்றோம்.

தனிமையில் மிகவும் பரிதாபகரமாக உட்கார்ந்திருந்த சின்னம்மாளுடைய கவலை அதிகரித்தது. "இது சாமானியமான மழையல்ல. பெரும் புயலும் கடுமையான பயங்கரமான இடியும் அனர்த்தமாகவே ஆரம்பித்திருக்கின்றன. ஏற்கெனவே பிராணன் போய்க்கொண்டிருக்

கும் கிழவர்மீது இன்னும் இந்த மரம் முறிந்து விழுந்துவிடப் போகிறதே'' என்ற பயமும் பீதியும் உண்டாயின.

உடனே "எம்மைப் படைத்த ஆண்டவனே தன் சன்னிதானத்தில் இடங்கொடுக்க மறுப்பானாகில் மனிதர்கள் கொடுக்கப்போகிறார்களா? ஈசா! நீ விட்டதே வழி" என்று மனத்தை திடப்படுத்திக் கொண்டாள். கிழவரிடத்திலிருந்த அபாரமான அன்பின் ஆழத்தினால் தூண்டப்பட்டுத் தான் ஒரு சிறுமி என்பதையும் பாராது கிழவரைத் தூக்கி தன் தோள்மீது போட்டுக்கொண்டாள். அவரது கால்கள் பூமியில் இழுக்கின்றன. உடம்பு இப்பாவையின்மீது தாங்கி இருக்கின்றது.

தூக்கமுடியாது, நடக்கமுடியாது சிரமமும் காற்றும் அலாக்காகத் தள்ளுகின்றன. ஓரடி வைப்பது பரமவேதனையாயும் மூச்சு திணறும்படியாயும் இருக்கிறது. தைரியத்தைக் கைவிடாமல் மெல்ல மெல்ல மரங்களில் முட்டிக்கொண்டும் உராய்ந்துகொண்டும் தட்டித் திணறியவாறு பிள்ளையார் கோயிலுக்கே வந்து கிழவரை மெல்ல கீழே கிடத்திவிட்டு மீண்டும் அவ்விடத்திற்கு ஓடி, அலறிப் புலம்பும் சிறுவனையும் தூக்கிக்கொண்டு வந்து அங்கு அணைத்து வைத்துக் கொண்டாள்.

உக்ரமான காற்றும் பெருந் தூறலான மழையும் கலந்து வாட்டுகின்றன. நேராகத் தலைமீது விழவில்லையேயன்றி நாற்புறத்துச் சாரலும் வீசி எல்லோரையும் தெப்பமாகச் செய்துவிட்டது. இடையில் கட்டியிருக்கும் கந்தையைத் தவிர வேறு துணிக்கந்தையுண்டா? ஒன்றுமில்லை. தன்னுடைய இதுகால பரியந்த வாழ்நாட்களில் பட்ட துன்பங்களுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோன்ற இச்சமயத்து சங்கடத்தை அவளால் சகிக்கமுடியவில்லை.

குளிர் ஒருபுறம் உதறுகின்றது. கிழவருக்கோ மூச்சு வருவதைத் தவிர வேறு நினைவே கிடையாது. ஒரே கட்டைபோலாகிவிட்டார். சிறுவனுக்கோ குளிரினால் வடவடவென்று தேகம் நடுங்கி கட்டையைப்போல விரைத்துவிட்டது. கிழவரைத் தொட்டுப் பார்க்கிறாள்;

பையனைத் தொட்டுப் பார்க்கிறாள். தன் நிலைமையின் பரிதாபத்தை எண்ணி வருந்துகிறாள். என்ன செய்வாள் பாவம்! கண்ணீர் சொட்டுவதையும் கலங்கிச் சாவதையுந் தவிர வேறு செய்வதையறியாது தவிக்கிறாள்.

வானத்திலிடிக்கும் இடியோ மங்கையின் மார்பில் இடிக்கின்றது. வானத்தில் குழம்பியோடும் மேகங்களோ, சிறுமியின் மனத்தைக்கலக்கிப் பிழிந்துவதைத்தோடுகின்றன. வானத்தின் மின்னல்கள் பளிச்சு பளிச்சென்று தோன்றி மறைவதுபோல ஏழை பரதேசிப் பெண்ணின் எண்ணங்கள் கணக்கிலடங்காது தோன்றி மறைந்து இருளுண்டாக்குகின்றன. வானத்தில் பொழியும் மழையோ இப் பேதைப் பெண்ணின் இரு விழிகளிலும் பொழிந்தோடுகின்றது. கட்டுக்கடங்காக் கடும் புயல் காற்றோ...இப் பிச்சைக்காரியின் இருதயத்தில் ஆத்மா நிலைக்காது தத்தளித்துத் தவித்து பெரும் புயலாகிய துயரச் சுழலில் சிக்கி வேதனைப் படுத்துகின்றது. ஏ கணேசா! சர்வ வல்லமை படைத்த விநாயகா!......ஏ ஜகன்னாதா! ஜகத்ரக்ஷகா! இக்கொடிய ஆபத்து வேளையிலுமா நீ தூங்குகிறாய்? நீ தீனதயாளனல்லவா, பக்தவத்ஸலனல்லவா?......

" அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே!
ஆரமிர்தே! என் கண்ணே! அரியவான
பொருளனைத்துந் தரும்பொருளே! கருணைநீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே! புனிதவாழ்வே!
கருதரிய கருத்ததனுட் கருத்தாய மேவிக்
காலமுந் தேசமும் வகுத்துக்கரு வியாதி
விரிவினையுங் கூட்டியுயிர் திரளையாட்டும்
விழுப்பொருளே! யான்சொல்லும் விண்ணப்பங் கேளே "

என்ற அருமையான பாடலை மனமுருகி மெய்மறந்துப் பாடி ஈசனைத் துதித்தபடியே அம் மண்டபத்துக் கல் தூணில் சாய்ந்தாள். அடுத்த விநாடியே தன்னிரை யழிந்தாள். இன்ப துன்பமறியும் உணர்ச்சியற்றாள். உயிருள்ள சவம்போலாகிவிட்டாள்.

சண்டமாருதத்தின் விபரீதத் தாண்டவக் கோலத்தை வர்ணிக்க

முடியுமா! பூமாதேவியும் நடுங்கினாள். இயற்கை தேவியும் ஒளி குன்றி சோபையை இழந்த முகத்துடன் தம்பித்துவிட்டாள். கொடிய இந்த புயலுக்கு எத்தனை மரங்கள் பலியாயின. எத்தனை குடிசைகள் அடியோடு காற்றாடிபோலப் பறந்து அவற்றிலடக்கமான ஜனங்களையும் பறக்கவைத்தன. எத்தனை குட்டிச்சுவர்கள் வீடுகள் விழுந்தன. எத்தனை ஆடு மாடு முதலிய ஜந்துக்கள் இந்த விபத்தைத் தாங்காது பலியாகிவிட்டன.

அப்பப்பா! கோரம்! கோரம்! சகிக்கமுடியாத கோரம்! எங்கும் ஒரே கூக்குரல். "என்னுடைய வீடு போயிற்று, என்னுடைய தோட்டம் அழிந்தது, என்னுடைய மரங்கள் போயிற்று, என்னுடைய ஆடு மாடுகள் போயிற்று, என்னுடைய சாமான் சேதமாயிற்று, என்னுடைய களத்துமேட்டிலிருந்த நெற்களம் அப்படியே பறந்தது......வீடு விழுந்து அடிபட்டது........என்று

அடாடாடா! சொல்லத் திறமற்ற குரல்கள் வானத்தை யளாவிக்கிளம்பிட்டன. கொடிய புசலையும் இருளையும் தள்ளி விரட்டியடித்துக்கொண்டு இந்த அலங்கோலத்தைக் காண கதிரவன் தனது கிரணங்களுடன் கீழ்த்திசையில் தோன்றினான். அலைகடலின் கொந்தளிப்பும் காற்றின் ஆவேசமும் சிறிது அடங்கி இயற்கையன்னையின் அமைதிச் சக்கரத்தில் கட்டுப்பட்டதேபோல ஓய்ந்து நின்றன.

182980

மரத்தில் கூடுகட்டி இருந்த பக்ஷிகளின் கூடுகள் நாசமாகி அதனுள்ளிருந்த குஞ்சுகளும் முட்டைகளும் நிர்மூலமாகிவிட்டன. எத்திசையை நோக்கினும் சண்டாள சண்டமாருதத்தின் கொடிய ஆட்சியின் பரிபவம் சகிக்கமுடியாத விபரீதக் காட்சியாகிவிட்டது. ஜனங்களின் பிரலாபமும், பரிதாபமும் கூறத் திறமேயல்ல. தலைசாய்ந்திருந்தநெல் முதலிய தானியக் கதிர்கள் இருந்த இடந்தெரியாது சிதறிப் போய்விட்ட கண்ராவியைக் கண்டு விவசாயிகள் போடும் கூக்குரல் வானத்தைப் பிளக்கின்றது. என்னே பரிபவம்! என்னே பரிதாபம்!

இத்தகைய அலங்கோலத்தின் மத்தியில் நமது கதா நாயகியான பிச்சைக்காரி சிறிது தெளிவு பெற்றுக் கண்ணைத் திறந்தாள். அப்போதும் பயங்கரமான சப்தத்துடன் புயல் அடிப்பதுபோலவே மனத்தில் கிலி பிடித்து வாட்டுகிறது. கண்ணை விழித்து நாற்புறமும் பார்த்தாள். தன்னுயிருக்கு உயிரான தாதாவையும் தம்பியையும் கவனித்தாள். அந்தோ! என்ன விபரீத கோரக் காட்சி! என்ன கொடுமையான சம்பவம். சின்னம்மாளுடைய பாட்டனார் நிம்மதியான—நிரந்தரமான—ஓய்வுகொண்டு நிச்சிந்தையாகப் படுத்துவிட்டார். தம்பிக்கு மட்டும் மூச்சு வருவதும் மார்பு படபடவென்று அடிப்பதையும் பார்த்தாள்.

என்ன செய்வாள் சிறுமி! தீயை மிதித்தவள்போலத் தத்தளிக்கின்றாள். "தாதா! தாதா!...என்னருமைத் தாதா"...என்று கிழவர் மேல் விழுந்து கதறுகிறாள்......உடனே பக்கத்திலிருக்கும் தம்பியைப் பார்க்கிறாள். அவனது உயிராவது இதுமட்டும் தப்பி இருக்கிறதே? என்ற சிறிது சந்தோஷமும் உண்டாகிறது. அவனைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். பேச்சு மூச்சில்லை. பயமும் திகிலும் கவலையும் கப்பிக்கொண்டன.

"ஏ க்ருபாநிதே! இவனுக்காவது ஒன்றுமில்லாது காப்பாற்ற வேண்டுமே! ஐயோ!...இரவு உணர்வற்று கிடக்கச்செய்த என்னை மீண்டும் என் ஈசன் தெளிவு உண்டாக்கி வருந்த வைக்கவேண்டும்? அடாடா! என்னுவியும்கூட மறைந்திருக்குமாயின் எத்தனை நிம்மதியாக...சே....இதென்ன இப்படி நினைக்கிறேன். என்னருமைச் சின்னுனுக்கு இப்புவியில் கடவுளால் காட்டப்பட்ட மனுஷி நான் ஒருத்தியேயன்றோ! நானும் கண்ணை மூடிவிட்டால் என் செல்வத் தம்பியின் கதி—சிறிய பாலகனின் கதி—என்னவாகும். அவன் எப்படி பிழைப்பான். ஒரு வாய் தண்ணீருக்கு நேற்று நான் பட்ட பாட்டில் ஏழைப் பரதேசிச் சிறுவனின் வருங்காலத்தின் வாழ்வு எப்படி நடக்கும்?

ஆகா! பணத்தினலன்றோ இக் காலத்தின் வாழ்க்கை அமைந்திருக்கிறது. பணமல்லவா ப்ரதானம். பணமில்லாவிட்டால் பிணம்.

பிணந்தான். இதிற் சந்தேகமா......என் சின்னன் பிழைத்துவிட்டால் இப்போது போதுமே;...என்று சிறிது விரக்தியாலும் மனக் கொதிப்பினலும் நினைத்தாள். க்ஷண நேரத்திற்குள் நெஞ்சம் பஞ்சாய்ப் பறந்து தவித்துச் சுழல்கின்றது.

மீண்டும் தாதாவின்மேல் பாய்கிருள். கதறுகிருள். பழங் காலத்து நினைவுகளால் வருத்தப்பட்டுப் பெருமூச்சு விடுகிருள். ஆண்டாண்டுதோறும் அழுது புலம்பித் தவித்தாலும், இனி பயன்யாது? ஐயோ! இரவே கோயிலில் இறந்தால் என்ன செய்வதென்று தூக்கிப்போட்டுச் சென்றவர்கள் வந்துவிட்டால் என்ன சொல்வார்களோ! எத்தனை அமர்க்களம் இருக்கிறதோ!...அந்தோ! பிறந்ததொரு ஊரு, வளர்ந்ததொரு ஊரு, மத்தியில் பிழைத்ததொரு ஊரு. பின்னர் வறுமைதேவியின் தாண்டவத்தினல் வயிறு வளர்க்கத் திரிந்தவை பல ஊர்கள். கடைசியில் ஒரு வாய் தண்ணீருக்கும் பஞ்சமாகிவிட்ட இந்த ஊரில் இறக்க நேர்ந்த விதியை என்னென்பேன்........

ஹா ! கிழவரின் காலம் முடிந்துவிட்டது. அவரை எப்படி அடக்கஞ் செய்வேன்? திக்கற்ற பரதேசி எனக்கு யாது வழியை ஈசன் காட்டுவன்? ஹா! சர்வேசா...—சோதனை என்பது உண்டு. பல பெரியார்களை எல்லாம் அச் சோதனை தேவதை வாட்டி வதக்கி இருக்கிறது. ஆனல் இப்படி என்போன்று சோதனைக்குள்ளான பாவிகளும் உலகில் உண்டா ?......

ஐயோ! இன்னும் என்னென்ன சோதனைக்கு என்னை இலக்காக்கப்போகிருயோ?....சர்வேசா!....போதும்!...போதும்...இம்மட்டும் சோதித்தது. இனி உன் மனமிரங்கலாகாதா?...இந்த சவத்தை நான் எங்ஙனம் முன்பின்னறியாத இந்த ஊரில் கையில் தம்பிடி இன்றி அடக்கஞ் செய்வேன்? தாதா! என்னருமை தாதா! தாங்கள் எனக்குச் சொல்லிய சந்திரமதியின் கதை நினைவிற்கு வருகிறதே! என்ன செய்வேன்? தாங்கள் விசாரமற்று வேதனையற்றுக் கண்மூடி மவுனியாகிவிட்டீர்கள்? அந்த துன்பங்கள் முற்றும் என்னைச் சூழ்ந்துவிட்டதே! என் செய்வேன்?...என்று முட்டிக்கொள்கிருள்.

கொடிய புசலின் அலங்கோலம் வெளிச்சம் ஏற ஏற நன்ருகத் தெரிகின்றது. ஜனங்களின் கூக்குரலும் விபரீதமும் அப்போது தான் சின்னம்மாள் உணர்ந்தாள். நேரஞ் செல்லச் செல்ல கும்பல் கூடிவிட்டது. ஐயோ அனியாயமே! கோயிலில் பிணம்...கோயிலே பாழாகிவிட்டது. சாமியே தீட்டாய் நசித்துவிட்டது. என்று கண்டபடி திட்டுவோரும், ஐயோ பாவம்! அறியாச்சிறுமி...பிணத்தை வைத்துக்கொண்டு புலம்புகிருள்...சிறுவனும் சாகக் கிடக்கிருன்'' என்று சிலரும் தம்தம் போக்காகப் பேசுகிருர்கள்.

சிலர் சின்னம்மாளே அனுதாபத்தோடு விசாரிக்கவும் தொடங்கினர்கள். "ஐயா! நான் மகா பாவி பரதேசி, எங்களுடைய பிச்சைக்காரக் குடும்பம் சிதறுண்டுவிட்டது. தயவு செய்து இவரை அப்படி தூக்கிவிட்டு விடுங்களேன்; உங்களுக்குப் புண்ணியமுண்டு'' என்று கெஞ்சிக் கண்ணீர் வடிக்கிருள்.

"யார் பிணத்தைத் தீண்டுவது. இந்த குளிரில் யார் முழுகுவது'' என்று மழமழ கொழகொழவென்று வேடிக்கை பார்த்துவிட்டு நழுவி விடுகிருர்களேயன்றி உதவி செய்ய யாரும் முன்னே வரவில்லே. ஏழைப் பெண்...நொந்துவிட்ட மெலிந்த பெண் என்ன செய்வாள் பாவம்.

கோயிலேச் சார்ந்தவர்கள் இரவு வந்தவர்கள் வந்து இந்த சம்பவத்தைப் பார்த்ததும் அபாரமான ஆத்திரத்தை யடைந்து தத்திக் குதித்துத் தாண்டவமாடி அந்த பிச்சைச்காரப் பெண்மீது பாய்ந்து சற்றும் இரக்கமின்றி அவளே தடார் புடார் என்று அடித்து "பிச்சைக்கார நாயே! பொறுக்கித் தின்னும் புழுவே! இரவு நாங்கள் தூக்கி வெளியில் போட்டுவிட்டுப் போனேம். திரும்பவும் இங்கு கொண்டு போட்டுக் கோயிலேயும் சாமியையும் பாழ்படுத்திவிட்டாயா! தடி முண்டை...கோயில் பாழாகிவிட்டதே! சாமிக்கு சக்தி குறைந்து போய்விட்டதே!.....என்று தாறுமாருக திட்டுகிருர்கள்.

இந்த அட்டகாஸத்தை தூரவிருந்து வேடிக்கை பார்க்கும் வீணர்களின் கூட்டத்தினரில் ஒருவராவது இப் பிச்சைக்காரிக்குப்

பரிந்து பேசவில்லை. கோயில் பாழாகிவிட்டதென்ற கூக்குரலையே சிலர் கிளப்புகின்றார்கள். இவள் பரிதாபத்திற்கு எப்படி எல்லை கட்டி வர்ணிக்க முடியும்.

இத்தனை அடிகளையும் தாங்கிக்கொண்ட சின்னம்மாள் புலம்பியபடியே "ஐயா! ஆபத்தென்பது எல்லோருக்கும் ஒன்றல்லவா? எல்லோரையும் காத்து ரக்ஷிக்கும் ஈசனுக்குத் தீட்டும் விழுப்பும் உண்டா? தன் சன்னிதானத்தில் ஒரு ஆத்மாவுக்கு இடங் கொடுப்பதற்கு அவனுக்கு ச்வாதீனமில்லையா? உங்களுக்குத் தான் கருணையற்று விட்டதென்றால் பொதுவான ஈசனுக்குமா கருணை யற்றுவிடும். அவனுக்கு எல்லோரும் சமம் என்பதைக் கூறவேண்டுமா? இம்மாதிரி ஆபத்து எல்லோருக்கும் வருவது சகஜ மல்லவா? வீணே ஒரு ஏழையை வருத்தாதீர்கள்" என்று சொல்லி முடிப்பதற்குள் அவர்கள் நாகம்போலச் சீறி விழுந்து,

"ஆஹ்ஹா! என்ன சொன்னாய்? நீ செய்த குற்றத்தையும் மறந்து இந்த மாதிரி ஆபத்துக்கள் எல்லோருக்கும் வரும் என்று கூறுகிறாய். பிச்சைக்கார நாயே! பேயே! நீ செய்த இந்த அக்ரம மான காரியத்தினால்தான் இரவு ஈசனுக்குப் பொறுக்காமல் இப்படிப் பட்ட விபத்தை உடனே உண்டாக்கிவிட்டான். பாதகி! சண்டாளி! நீ கால் வைத்த நேரம் ஊரே அழிந்துபோய்விட்டது" என்று மீண்டும் அடி அடி என்று அடித்துத் திட்டினார்கள்.

அச்சமயம் அக் கூட்டத்தில் ஒரு மூலையிலிருந்த ஒருவர் கண்கள் சிவக்க ஆத்திரத்துடன் முன்னே வந்து அந்த மனிதனைப் பார்த்து,நிறுத்துமையா!நானும்அப்போதுமுதல் பார்க்கிறேன்.ஐயோ பாவம்! ஏழைப் பிச்சைக்காரி என்ற இரக்கம் சிறிதுமில்லாமல் இப் படியா கையைத் தீண்டி சற்றும் அஞ்சாது அடிப்பது? நாக்கில் நரம்பின்றி இத்தனை துடுக்காகவா பேசுகிறது?

இந்த ஏழைச் சிறுமியினாலா ஊருக்கு விபத்து வந்தது. வெகு அழகு வெகு ஒழுங்கு. கோயில் கோயில் என்றும் சாமிக்கு எல் லாம் செய்வதாகவும், சாமி பக்தன் என்றும் வேஷம் போட்டுக்

கோயில் பெருச்சாளியைப்போல கோயில் சொத்துக்களையே பிள்ளை யார் பெயரைச்சொல்லி கபளீகரம் செய்யும் உமது யோக்யதைக்கும் ஏழை,பணக்காரர்கள் என்கிற பக்ஷபாதமுடைய உமது செய்கைக்கு இப்படியா விபத்து வரும்? பூகம்பமே வந்து ஊரே யழித்தல்லவா போய்விடும்?

ஐயா! சற்று நிதானித்து உமது ஊழலையும் பார்த்துக் கவனித் துப் பேசும். ஐயோ'பாவம்! ஏழைகளிடத்தில் இரக்கங் காட்டாத கர்மி...பணக்காரர்களுக்குக் கால் செருப்பு தூக்கும் யோக்யதை யுடைய நீரா இந்த கேள்வி கேட்பது. கை நீண்டி யடிப்பது போதும் நிறுத்துமையா ?

பிள்ளையாருக்கு ஏதோ பெரிய உத்ஸவம் செய்வதாகப் பெரிய பெரிய மனிதர்களிடமெல்லாம் பணம் வ்யாபரித்தீரே! அதை எந்த உத்ஸவத்திற்குச் செலவுசெய்தீர்...ஏதோ சாமிக்குக் கால் பங்கு செலவு செய்துவிட்டு உமது குடும்ப உத்ஸவத்திற்குச் செலவு செய்த பெரிய மனிதரல்லவா! இந்த செய்கைக்குப் புயல்காற்று வரவே வராது.

அதோடு இதே இடத்தில் இதே கோயிலில் நாலைந்து வருடங் களுக்கு முன்பு பனைமரப் பட்டி ஜெமீந்தார் சுவாமி தரிசனத்திற்கு வந்திருந்தபோது ஜெமீந்தாரின் தாயார் திடீரென்று மாரடைப்பி னால் இந்த மண்டபத்தில் உயிர் துறந்தபோது நீர் என்ன செய்தீர்? யாரையடித்தீர்? அப்போது எந்த புசல் அடித்தது? உமது சாமியும் கோயிலும் அப்போது எங்கே போயிற்று.

ஐயா! எல்லாம் கண்மூடி வித்தையல்ல. இதே கண்ணால் இதே மனிதன் பார்த்த சம்பவமே........பணந்தான் ப்ரதானம். பணம் பேசியது. பணம் தாண்டவமாடியதால் சவச் சடங்கிற்கு நீரே உதவி இருந்து பூர்த்தி செய்தீர். இந்த சம்பவத்தைப் பார்த்த யாரும் இதை மறக்க முடியாது. ஜாக்ரதை! இந்த ஏழை பிச்சைக் காரியின் குடும்பமாதலால் இந்த ஆட்டம் ஆடுகிறீர்கள்'' என்று சற் றும் பயப்படாமல் தைரியமாய் விடுவிடு என்று கர்ஜனை செய்வது

போலு கூறிக்கொண்டே உடனிருந்த ஒருவனின் சகாயத்தால் பிணத்தைத் தூக்கி அருகிலிருந்த தோப்பில் கிடத்திவிட்டான்.

இந்த எதிர்பாராத விதமான சம்பவத்தைக் கண்ட எல்லா ஜனங்களும் திகைத்தார்கள். நமது பிச்சைக்கார சின்னம்மாளுக்கோ தன் பக்கம் பரிந்து பேசுவதற்கும் உலகத்தில் ஒருவர் இருக்கின்றார்களா? என்ற வியப்பும் அல்ப சந்தோஷமும் உண்டாகியது. தன் தம்பியை தூக்கிக்கொண்டு கிழவரைக் கிடத்தியுள்ள இடத்திற்கு புலம்பியபடியே விரைக்க விரைக்க ஒடி தம்பியை கீழே விட்டுவிட்டு தனக்காகப் பேசி உபகாரம் செய்த மனிதனுடைய காலில் விழுந்து, "ஐயா! தோன்றாத்துணைவராக இந்த விநயகமூர்த்தியே தமதுவடிவமாக வந்து உதவி செய்தார் என்றே நினைக்கிறேன். எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. நான் எவ்விதமாக என் வந்தனத்தைச் செலுத்துவேன்?" என்று மேலே கூறமாட்டாது கண்ணீர் வடியத் தழதழத்த குரலில் கூறினள்.

இதற்குள் அங்கு பெருத்த குழப்பம் உண்டாகிவிட்டது. கோயில் அதிகாரிக்கு அசாத்ய கோபம் வந்துவிட்டதால் அவன் வாயில் வந்தபடி எல்லாம் திட்டி இரைச்சலிட்டுக்கொண்டு ஒடிவந்து "ஆஹா!........மடப்பயலே! அநியாயக்காரப் பாவி! என்னையாடா பார்த்து இந்த வார்த்தை சொன்னய்...என்று கூறிக்கொண்டே ஆத்திரத்துடன் அடித்துவிட்டான்.

அருகிலிருந்தவர்களில் சிலர் மெல்ல நழுவிவிட்டார்கள். சிலர் இவன் பக்கம் பேசினர்கள். சிலர் அவன் பக்கம் பேசினர்கள். சிலர் நடுநிலைமையில் நீ சொன்னதும் தப்பு; அவன் அடிப்பதும் தப்பு என்று கோமுட்டி சாக்ஷி சொன்னர்கள். சிலர் சண்டையைத் தடுக்க முன்வந்தார்கள். அடிக்கவாரம்பித்ததும் சண்டை வலுத்துவிட்டது.

கோயிலதிகாரியின் ஆத்திரத்தினல் மூர்க்கத்தனமாக கண்ணு மண்ணு தெரியாமல் அடித்துவிட்டதால் க்ருஷ்ணன் என்கிற அவனுக்கு பலத்த அடி பட்டுவிட்டது. மூக்கினல் ரத்தங் கொட்டுகிறது. மண்டையில் ரத்தம் வந்துவிட்டது. மூச்சுபேச்சின்றி

விழுந்துவிட்டான். இந்த கோரக் காட்சியினுல் ஜனங்களின் பரபரப்பும் பயமும் அதிகரித்துவிட்டன. ஐயோ!...மோசம்...மோசம்...இறந்துவிடுவானே, என்னவோ?....இங்கிருந்தால் இது பெரிய வம்பாக முடியும். சாட்சி சொல்ல கோர்ட்டுக்கு இழுப்பார்கள்" என்று பயந்து ஓடத் தலைப்பட்டுவிட்டார்கள்.

என்னே பரிதாபம்! தனக்கு உதவி புரிய வந்த மனிதனுக்கும் இத்தகைய ஆபத்து விட்டதே! ஐயோ! மூக்கினுல் ரத்தம் வழிகிறதே! என்னசெய்வேன்? இந்த பாபமும் என்னைச் சார்ந்ததாக வன்றோ ஆய்விட்டது. ஹா! ஈசா!...சர்வேசா!...ஜகதீசா! இதுவோ உனக்கு மகிழ்ச்சிக்கூத்து! ஐயோ! என்ன செய்வேன்?...என்று தத்தளித்துத் தவித்துப் புழுவெனத் துடித்து இடிந்துபோய்விட்டாள்.

---

## 4-வது அதிகாரம்

## தோன்றாத் துணையும் தீராத் துயரமும்

"உலகத்தில் மக்கள் தம்மையறிந்தும் அறியாமலும் இழந்துவிடுவது என்னவென்றால் பொறுமையைத்தான். பிறகு தான் மற்றவைகளை இழந்துவிடுகிறார்கள். பொறுமையை இழப்பதன் பயனுக பெருமையும் புகழும் தாமாக அகன்றுவிடுவதோடு சிறுமையும் இகழும் தாமாகவே புகுந்துவிடுகின்றன. இது உலகத்தில் மக்களிடை விளங்கும் அனுபவமாகும்.

சுமார் ஐம்பது வயதிற்கு மேல்பட்ட தள்ளாத கிழவி அதிகாலை நேரமாகிய அவ்வேளையில் முதல்நாளின் அலங்கோலத்தினுல் புறக்கடையிலிருந்த சிறிய செடிகளெல்லாம் சின்னபின்னமாக சிதறிக் கிடப்பதைக் கண்டு விசனித்து அவைகளைப் பார்த்துக்கொண்டிருக்

கையில் அவளுடைய உயிரையே வாங்குவதற்கு ஒப்பாக அவள் மகனைக் கோயிலதிகாரிகள் பலமாக அடித்துவிட்டதால் மூக்கிலும் மண்டையிலும் ரத்தம் வடிந்து விழுந்து கிடக்கிறான் என்ற செய்தியைப் பொது ஜனங்கள் கூறினார்கள்.

கொடிய சர்ப்பத்தை மிதித்தவள்போன்று இச் செய்தியைக் கேட்டதும் குய்யோ முறையோ என்று அலறி அடித்துக்கொண்டு விழுந்துவிட்டாள். பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் எழுந்து கதறிக்கொண்டே தன் மகன் கிருஷ்ணன் விழுந்து கிடக்கும் இடத்திற்கு ஓடி வந்தாள். மகனின் பரிதாபத்தைக் கண்டு சகிக்காது துடிக்கிறாள்; பிரலாபிக்கிறாள். அருகிலுள்ளோரின் மூலமாக விஷயத்தை யறிந்துகொண்டு பிச்சைக்கார சின்னம்மாளையும் கோயிலதிகாரியையும் கண்டபடி திட்டித் தன் ஆத்திரத்தைக் காட்டுகிறாள். இந்த பிச்சைக்காரப் பாவி முண்டைக்குப் பரிந்ததனாலன்றோ என் மகன் கதி இப்படியாயிற்று. அட படுபாவி மகனே! உனக்கு வந்த கேடு என்னடா? என் மகனைக் கொண்ணுவிட்டாயே! ஐயோ! நான் என்ன செய்வேன்? உங்களெழுவெடுக்க. நீங்கள் என் வாயில் மண்ணைப்போடவா எமனைக வந்து சேர்ந்தீர்கள்?'' என்று அடித்துக் கொண்டு அழுகிறாள்.

அடித்தவன் அப்போதும் அடங்காமல் குதித்துக் கூத்தாடி, "என்மீது படாப் பழி சுமத்திப் பலர் முன்பு அவமானம் செய்து பேசியதற்காக இவன்மீது மான நஷ்ட வழக்கு தொடர்ந்து என்ன பாடு படுத்துகிறேன் பாரு '' என்று தாண்டவமாடுகின்றான். இதைக் கேட்டதும் ஏழைகளாயும் படிப்பின்மையினால் விவகாரமே யறியாதவர்களாயுமுள்ள மற்றையோருக்கும் கிழவிக்கும் பயம் எடுத்துக் கொண்டது. அடித்ததற்காக வழக்கு செய்யும் எண்ணமே தோன்றாது நடுங்கிவிட்டார்கள்.

இதற்குள் சிலர் மத்யஸ்தம் செய்து விஷயங்களை அப்படியே அடக்கியதோடு கிருஷ்ணனையும் அவன் தாயையும் ஒரு மாட்டு வண்டியிலேற்றி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்கள். இரவு அடித்த காத்து மழையின் ஆர்ப்பாட்டத்தைவிட விடிந்த பின்னர் அதிகரித்த

அனர்த்தமாகிவிட்டது. அப்படியப்படியே கூட்டங் கலைந்துவிட்டது.

அதற்குமேல் என்ன செய்வது? ஒரு செத்த பிணம்......ஒரு சாகாத பிணம் இரண்டையும் வைத்துக்கொண்டு சின்னம்மாள் தத்தளிக்கிறாள். தன் பாட்டன் இறந்துவிட்ட துக்கம் ஒரு புறம், தம்பி கண்ணைத் திறக்காது கிடக்கும் விசனம் ஒரு புறம். தன்னால் அன்னியனுக்கு நேர்ந்த ஆபத்தைக் காண சகிக்கக்கூடாத வேதனையொருபுறம் ஆக எல்லாம் ஒருங்கே சேர்ந்து வாட்டி வதைத்துக் கொல்கின்றன.

பிணத்தை அடக்கஞ்செய்யக் கையிலோ காலணா இல்லை. சடங்குகள் எல்லாம் இல்லாவிட்டாலும் தூக்கிக்கொண்டுபோய் கட்டை முட்டையாவது போட்டுக் கொளுத்தவேணுமே? அதற்குக் குறைந்தது பிடிக்கும் பணத்திற்கு என்னசெய்வது என்கிற ஏக்கம் பிடித்துக்கொண்டது.எந்த விசனத்தை எண்ணித்தான் புலம்புவாள்?

நேரமோ ஏறயேற வெய்யில் அதிகரிக்கின்றது. பிணத்தை எரும்பு ஈ மொய்க்கவாரம்பித்துவிட்டன. வெட்ட வெளியில் கிடப்பதால் காக்காய் முதலிய பக்ஷிகளும்

வரிக்கோல வேல்விழியா ரனுராக மயக்கிற் சென்று
சரிக் கோது வேனெழுத் தைந்துஞ் சொலேன் றமியேனுடலம்
நரிக்கோ கழுகு பருந்தினுக்கோ வெய்ய நாய் தனக்கோ
வேரிக்கோ விரை யெதுக்கோவிறை வாகச்சியே கம்பனே!

என்று பட்டினத்தார் பாடியுள்ளபடி வட்டமிட்டுப் பறக்கின்றன. என்ன செய்வாள் பாவம்! அங்கு முறிந்து கிடக்கும் மரங்களையெல்லாம் எடுக்கும்பொருட்டுப் பலர் கூடியவர்கள் இங்கும் வேடிக்கை பார்த்துச் செல்கிறார்கள். அவர்களில் ஒரு கிழவி மட்டும் இங்குள்ள இக்கோர காட்சியைக் கண்டு அனுதாபப்பட்டு சின்னம்மாவுக்குத் தேறுதல் கூறியதோடு, "அம்மா! நான் இங்கு பிணத்தையும் பையனையும் பார்த்துக்கொள்கிறேன். நீ சென்று துக்க சம்பவத்தைத் தெரிவித்து காசு பிச்சை வாங்கிக்கொண்டு வா! கிடைத்தவரையில் கொண்டு பிணத்தை அடக்

கஞ் செய்யலாம். புலம்பாதே; நேரமாகிவிட்டது எழுந்திரம்மா. கண்ராவியைக் காணமுடியவில்லை. ஆபத்தென்றால் எல்லோருக்கும் ஒன்றல்லவா?'' என்று பரிதாபப்பட்டுக் கூறினாள்.

இந்த எதிர்பாராத உதவிக்காக சந்தோஷமடைந்து அவளை வணங்கிவிட்டுத் தன் தலைவிதியை எண்ணிப் புலம்பியபடியே எழுந்து சென்று, "அய்யா! அம்மா! தருமப் பிரபுவே! திடீரென்று என் பாட்டனார் இறந்துவிட்டார். அதோ அந்தத் தோப்பில் பிணம் கிடக்கின்றது. தயவு செய்து உதவியளிக்க வேண்டும். பிணம் அடக்கமாகவேண்டும். நாங்கள் பரம ஏழை பிச்சைக்காரக் குடும்பத்தினர்கள். ஒரு தம்பிடி காசு இல்லை. தருமம் செய்யவேண்டும்'' என்று பார்த்த மனிதர்களை எல்லாம் கல்லும் கரையும்படி கண்ணீர் பெருகக் கேட்டாள் யாசகமென்றால் சடக்கென்று எடுத்துக் கொடுக்கும் புண்ணியவான்கள் எங்கோ ஒரு சிலர் அகப்படுவதும் அரிதல்லவா? சிலர் பதில் சொல்லாமல் போய்விட்டார்கள். சிலர் "ஆமாம்; பிச்சை எடுப்பதில் இதொரு யுக்தியா? சாவு சொல்லிப் பிச்சை வாங்கவேண்டுமா போடீ போ!'' என்று விரட்டுகிறார்கள்.

பின்னும் சிலரோ, "இரவு அடித்த காத்து மழையினால் சொத்தைப் பறிகொடுத்துவிட்டு நாங்கள் தவிக்கையில் பிச்சை வேறு பிடுங்க வந்தாயோ? போ! போ! சாவுமாயிற்று வாழ்வுமாயிற்று'' என்று சிள்ளென விழுகிறார்கள். சில மகான்கள் ஏதோ ஓரணா, இரண்டணா சகாயம் செய்தார்கள். சிலர் வீட்டுப் படி ஏறும்போதே கதவைச் சாத்திக்கொண்டு விரட்டியடித்துவிட்டார்கள். பணக்காரர்கள் பிரார்த்தனை செய்துகொண்டு பிச்சைக்கு வந்தால் ரூபாய் ரூபாயாகப் போடுவார்கள். கேவலம் ஏழைப் பிச்சைக்காரியே பிச்சைக்கு வந்தால் யார் போடுவார்கள்?

"தர்மாத்துமாக்களே! இறப்பும் பிறப்பும் எல்லோருக்கும் உள்ளது. பிணம் நாறிவிடுகிறது. இந்த ஆபத்தில்கூட சகாயம் செய்யாமலிருப்பார்களா? நான் பட்டினி கிடந்தேனும் சாகிறேன். பிணத்தை அடக்கஞ்செய்ய உதவினால் போதும். புண்ணிய மூர்த்திகளே! வெய்யிலோ அதிகரிக்கின்றது.'' என்று புலம்பிக்கொண்டே

தெருவில் நடக்கவும் முடியாது தள்ளாடித் தள்ளாடி நடந்து செல்கிருள்.

அச்சமயம் அந்த வீதியில் போய்க்கொண்டிருந்த ஒரு கோச்சு வண்டி திடீரென்று நின்றது. அதிலிருந்து ஆனந்தாவும் அவள் கணவனும் வாடிய முகத்துடன் சடக்கென்று கீழே இறங்கி வேகமாக நடந்து வந்து பிச்சைக்காரியின் பரிதாபத்தைக் கண்டு மனமுருகியபடியே, "பெண்ணே! நில்லு நில்லு. ஏன் இப்படி தள்ளாடிக்கொண்டே செல்கிருயே! உன் பாட்டனும் தம்பியும் எங்கே? ஏன் புலம்புகிருய்?" என்று கேட்டார்கள்.

திடீரென்று தன்னையும் மதித்து இவர்கள் பேசியதைக் கேட்டுத் தலை நிமிர்ந்து பார்த்த சின்னம்மாள் அவர்களைத் தெரிந்துகொண்டாள். அடக்க முடியாத துயரத்துடன் விம்மி விம்மிப் புலம்பிக்கொண்டே நடந்த சகல விஷயங்களையும் கூறி, "புண்ணியமூர்த்திகளே! சவ அடக்கத்திற்குத்தான் பிச்சை எடுத்துக்கொண்டு போகிறேன். இரண்டொருவரைத் தவிர வேறு யாரும் கொடுக்கவில்லை. கண்டபடி ஏசுகிருர்கள். என் விதி என்னை எப்படி ஆட்டுகிறது பாருங்கள் என்று கட்டு மீறிய விசனத்துடன் கூறினுள்.

இதைக்கேட்ட தம்பதிகளின் மனம் உருகியது. "என்ன அநியாயம்! நேற்று நன்ருக இருந்த மனிதன் இன்று இறப்பதை யாரறிய முடிந்தது. சீச்சீ! மக்களின் வாழ்வு இவ்வளவுதான்" என்று கண்ணீர் உதிர்த்தார்கள். ஆனந்தா தன் பையிலிருந்து ஒரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்து சின்னம்மாள் கையில் கொடுத்து, "பெண்ணே! இதோ இதைக்கொண்டு சவச்சடங்குகளைச் செய்துகொள்ளு...

பணமிருந்தால்தான் மதிப்பு. இல்லாவிட்டால் பிணத்திற்குச் சமானந்தான். பணப்பேயின் தாண்டவத்தில்தான் உலகம் மூழ்கிக் கிடக்கின்றதென்பதை நானே நேற்று காட்டிவிட்டேன். அதன் பிறகு என் மடத்தனத்தை யறிந்து வருந்தினேன். இரவு முற்றும் உன் ரூபமும் பரிதாபமுமே கண்முன் தாண்டவமாடியது. பின்புதான் புத்தியும் வந்தது. தெய்வச் செயலால் உன்னைக் கண்டேன்.

சவச்சடங்கு முடிந்ததும் பையனை ஆஸ்பத்திரியில் கொண்டு காட்டு. அந்தப் பக்கம் வந்தால் என் வீட்டிற்கு வா. முன்போல பணக்காரர்களின் மோகத்தில் மறைந்துவிடமாட்டேன். என் சக்தியான பிச்சையைக் கொடுப்பேன்...புலம்பாதே...இனி எத்தனை தான்புலம்பிப் பயன் என்ன?...என்று கண்ணீர் உதிரக் கூறினாள்.

இதைவிட உதவி அந்த அனாதை பிச்சைக்காரிக்கு என்ன வேண்டும். சந்தோஷத்தினால் சிறிது தெம்பு உண்டாகியது. அவர்களே சாக்ஷாத் பார்வதியும் பரமேச்வரனும், லக்ஷ்மியும் நாராயணனும் என்று எண்ணி தன் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் காலில் விழுந்து வணங்கினாள். இன்னது பேசுவதென்று தெரியாது திகைத்தாள்.

பிறகு அவர்கள் தேறுதல் கூறிவிட்டு 'தோப்பில் வந்து பிணத்தைப் பார்த்து வருந்தினார்கள். அங்கிருந்த தோட்டக்காரனிடம் "இந்த சவச்சடங்கை கூடவிருந்து முடித்துவிடு'' என்று கூறிவிட்டுப் போய்விட்டார்கள். கல்லினுங் கொடிய மனதையுடைய கர்மிகள் நூறு பேர் இருந்தால் சிறிது இளகிய மனம் படைத்தவர்களும் சிலராவது இருக்கமாட்டார்களா!

இந்த ரூபாயின் உதவியாலும் அங்கு வந்த கிழவியின் உதவியினாலும் சவத்தை அடக்கஞ் செய்தார்கள். சின்னம்மாளின் துயரம் கூறத் திறமுள்ளதா? பாட்டனார்மீது விழுந்து புரண்டாள். அடக்கஞ்செய்து தலை முழுகிவிட்டு சின்ன தம்பியைப் பார்த்தாள். ஜுரம் நெருப்பு வேகமாகக் காய்கிறது. எவ்விதந்தானிருக்கும் அவள் மனது! குழம்பிவிட்டது. சவச்சடங்குக்கான செலவு போக கையில் இரண்டணா சில்லரைதான் மிகுந்தது. மூன்று நாளையப் பட்டினியாகிவிட்டது. பிராணன் பறக்கிறது. வறுமையினுங் கொடியது வையகத்திலுண்டா!

தம்பியை தூக்கித் தோள்மீது போட்டுக்கொண்டாள்.கண்ணீர் பெருகியவாறு சுமார் இரண்டு மைலுக்கப்பாலிருக்கும்நவீன புரியில் உள்ள தர்ம ஆஸ்பத்திரிக்கு வழி கேட்டுக்கொண்டே நடந்து

மாலை 4 மணிக்குமேல் போய்ச் சேர்ந்தாள். களைப்போ ஒரு புறம் தள்கின்றது; மனச் சோர்வும் துக்கமும், இச் சிறுவனுக்கு உடம்பு குணமாகவேண்டுமே என்கிற கவலையும் வதைக்கின்றது. அப்பாடா வென்று ஆஸ்பத்திரியின் வாசலில் போய் உட்கார்ந்தாள்.

அங்கு வீதியில் விற்றுக்கொண்டு போன காபி கொஞ்சம் வாங்கி அச் சிறுவனுக்கு வார்த்தாள். இரண்டு இட்டிலி வாங்கி தான் தின்று சிறிது பசியாறினாள். ஆஸ்பத்திரியிலோ கூட்டம் நிரம்பி இருக்கின்றது. ஒவ்வொருவரும் நோயாளிகளைப் பார்ப்பதற் காக வாசலில் காத்துக்கொண்டிருக்கிறார்கள். கேட்டில் காவல் காக் கும் வேலைக்காரனுடன் ஜனங்கள் வாதாடுவதும், அதுதான் சமய மென்று அவன் ஓரணாவும், இரண்டணாவும், அடித்துப் பிடிங்கிக் கொண்டு அவர்களை உள்ளே விடாமல் அழவைப்பதையும் ஒரு விளையாட்டுக் கூத்தாகவும் பணம் பறிக்கும் பேரமாகவும் செய்து கொண்டிருக்கிறான்.

மோட்டாரிலும் வண்டியிலும் வரும் பெரிய மனிதர்களை காவல்காரன் சலாம் செய்து உள்ளே விடுவதையும், அவர்களில் சிலர் தாமாகவே சில்லரை கொடுப்பதையும், சிலர் பிறகு ஆகட்டுமடா என்று அதிகாரத்துடன் கூறுவதையும், சிலர் ஏதும் பேசாது போவதையும் தூரத்திலிருந்து பார்க்கும் நமது பிச்சைக்காரிக்கு வியப்பின்மீது வியப்புண்டாகியது.

சில்லரைக் காசு கொடுப்பவர்களையே இந்த பாடு செய்யும் இவன் கேவலம் பறைதையாகிய என்னை உள்ளே விடப்போகிறானா! 'அம்மியுங் குழவியும் ஆகாயத்தில் பறக்கையில் இலவம் பஞ்சு எனக் கேன்ன கதி' என்றதாம். அதுபோல இங்கு என் கதியாகுமோ?... உம்...இத்தனை கோலங்களைக் காட்டிய ஈசன் இன்னும் என்னென்ன காட்டி யாட்டினாலும் அனுபவித்துத்தானே தீரவேண்டும் என்று தைரியங்கொண்டு எழுந்து வந்தாள்.

அங்கிருந்த ஒருவன், "நீ முதலில் புதிதாகக் காட்ட வந்திருப் பதால் அதோ அந்தப்பக்கம் சென்று சீட்டு வாங்கிக்கொண்டுவந்து இந்தப் பக்கத்து வழியால் உள்ளே போய் காட்டு" என்றான்.

இதைக்கேட்ட சின்னம்மாள் அந்த சீட்டு கொடுக்கும் பக்கம் சென்றாள். அங்குள்ள கூட்டமோ சொல்லமுடியாது. 'எனக்கு முன்னே' 'உனக்கு முன்னே!' என்று சண்டைசெய்து போட்டி போட்டுக் கத்துகிறார்கள்.

ஆஸ்பத்திரிக்கு ஒரு நாளும் வந்தறியாத இந்த பேதைக்கு இவை எல்லாம் விநோதத்திலும் விநோதமாக இருக்கிறது. இந்த சண்டையில் நெறுக்கித் தள்ளிக்கொண்டு உள்ளே போய் சீட்டுக் கொடுப்பவரிடம் சீட்டு வாங்கவோ இவளுக்கு அச்சமயம் சங்கோஜமாயிருக்கிறது. பழக்கமில்லாததால் பின்னாலேயே நின்றுகொண்டிருக்கிறாள். பையனோ கண்ணையே திறக்கவில்லை. ஜுரமோ நெருப்புக்குமேல் காய்கிறது. அதைப் பார்க்கும்போதோ கபீரென்று தூக்கிப்போட்டுச் சித்திரவதை செய்கிறது. இந்தக் கூட்டத்தின் ஆர்ப்பாட்டத்தைப் பார்த்தாலோ சீக்கிரத்தில் சீட்டு கிடைக்காது போலிருக்கிறது. என்ன செய்வாள் பாவம்.

சிறிது நேரம் பார்த்தாள். "ஐயா! சீட்டுக் கொடுக்கிற ஐயா! தயவு செய்து எனக்கு சீட்டுக் கொடுங்கள். குழந்தைக்கு உடம்பு அதிகமாகிக்கொண்டேபோகிறது. சற்று மனமிரங்கவேண்டுமென்று கத்தினாள். கூட்டத்திலிருப்பவர்களில் சிலர்...யாரடி அது! அப்போ பிடிச்சி காத்துக்கிட்டு கெடக்கரம் எங்களுக்கு இன்னும் நம்பர் வறல்லே; இப்பத்தான் வந்த இவளுக்கு இருக்கற ஆத்தரத்தையுங் கொயுப்பெயும் பாத்தியா?...என்ன தைரியமாகக் கேக்ரா! பேசாமே கெடடீ! கடைசீலே வந்தவங்களுக்கு கடேசீலேதாண்டீ கொடுப்பாங்க...மூலையில் ஒக்காந்திருடீ!" என்று அலக்ஷ்யமாகக் கூறிவிட்டார்கள்.

இதற்குமேல் என்னசெய்வாள் பாவம்! சிறுவனை வைத்துக் கொண்டு சிவனே என்று உட்கார்ந்தாள். மனம் இருக்கை கொள்ளவில்லை, யார் எத்தனை கடிந்து திட்டியபோதிலும் அதைக் காதில் வாங்காது "ஐயா! தயவு செய்யுங்கள். ஏழை பிச்சைக்காரியின்மீது இரக்கங் காட்டுங்கள்" என்று கூவிக்கொண்டே இருந்தாள். இந்த தர்ம கூச்சலுக்குச் செவி கொடுப்போர் யாரிருக்கிறார்கள்?

மணியோ ஏறிக்கொண்டே இருக்கிறது. பொர்சும், பணமும் மனித கட்டுப்பாடுமில்லாத இந்த பிச்சைக்காரி தவிக்கிருள் பாவம். மணி 6 அடித்துவிட்டது. அச்சமயம் பெரிய மணி ஒன்று அடித்தது. உடனே சீட்டுக் கொடுப்பவர் "வெளியே போங்கள். வெளியே போங்கள். மணி ஆறு அடித்துவிட்டது. இனி நாளைக் காலையில் தான் சீட்டு கொடுக்கப்படும் போங்கள்" என்று கூறிக்கொண்டே தன் மேஜைப் பெட்டியைப் பூட்டிக்கொண்டு போய்விட்டார்.

உடனே ஒரு வேலைக்காரன் வந்து எல்லோரையும் விரட்டி வெளியிலனுப்பிவிட்டு கதவைப் பூட்டிவிட்டான். சுமார் 20—30 பெயர்கள் திரும்பும்படி நேர்ந்துவிட்டது. அவர்களில் சின்னம்மாளும் ஒருத்தியாகிவிட்டது. வீதியில் சிறுவனை வைத்துக்கொண்டு தத்தளிக்கின்ருள். ஐயோ! என் விதி இந்த இடத்திலுமா துரத்திக் கொண்டு வந்து விட்டது. சிறுவனின் நிலைமையோ பார்ப்பதற்குப் பயங்கரமாகவிருக்கிறதே? இன்றும் மருந்தில்லாதுபோனுல் என்ன வாகுமோ தெரியவில்லையே! சர்வேசா! என் தம்பியின் உயிரையாவது எனக்குக் கொடுத்து ஆதரிப்பாயா! அதிலும் மோசம் செய்து விடுவாயா?...

ஆகா! பணமே! உன் தாண்டவமே தாண்டவம்! உன் மகிமையே மகிமை. நானும் ஓர் பணக்காரியாகி மோட்டாரில் வந்திருப்பேனேயானுல் எனக்கும் முதல்முதலே சீட்டு கிடைத்திருக்குமல்லவா? அல்லது பொர்சுக்காகிலும் யாரேனுமிருந்தால் என்னை மதிப்பாருண்டு. இரண்டுங் கெட்ட என்னை லக்ஷியம் செய்வது எங்ஙனம் கூடும்? அந்தோ! நேற்றிரவு அப்படி தபித்தாயிற்று. இன்றிரவை எப்படிக் கழிப்பேன். எங்கு இருப்பேன்?" என்று பலவிதமான கவலையினுல் தாக்கப்பட்டு பயித்தியக்காரிபோல அந்த ஆஸ்பத்திரியின் வாசலில் இருந்த ஓர் மரத்தடியில் கண்ணீர் ஆருய்ப் பெருகியவாறு உட்கார்ந்துவிட்டாள். ஈச்வரோ ரக்ஷது! இதற்குமேல் என்ன இருக்கிறது?

---

## 5-வது அதிகாரம்

### பண மற்றோர்கள் பிணத்திற்கு ஒப்பே

உலகம் மெச்சுவது குணத்தையல்ல, மனிதரையல்ல, குலம், கோத்திரம், பெரிய குடும்பம் முதலிய உயர்ந்தவைகளையல்ல. பட்டம், பதவி, பணம், படாடோபம் முதலியவைகளைத்தான் மதிக்கிறது என்பது அனுபவமாகிவிட்டது. 'பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்' என்பதுபோல பணமும் பக்க பலமும் அற்ற பிச்சைக்கார சின்னம்மாள் மரத்தடியில் உட்கார்ந்து இருள் வந்துவிடப்போகிறதே! நேற்று இன்னேரம் தாதாவை உயிருடன் வைத்திருந்தேன். இன்று அவரை இழந்து எரித்துவிட்டு உட்கார்ந்திருக்கிறேன்...என்ன சோதனைகளுக்கு உள்ளாக்குகிறான் ஈசன்! பெருந் துணையற்ற இந்த இடத்தில் இரவெல்லாம் எவ்விதம் காலத்தைக் கழிப்பேன்?', என்று ஏங்கிக் கதறுகிறாள்.

மோட்டார் கார்களிலும், தனி வண்டிகளிலும் நோயாளிகளும் கர்ப்பவதிகளும் வந்து தாராளமாக உள்ளே செல்வதையும் பார்த்துக் கொண்டே இருக்கிறாள். அவர்கள் ஒவ்வொருவராக வரும்போது தன்னையும் அழைத்துச் செல்லும்படியாக வேண்டிப் பார்த்தாள். ஒன்றும் பலிக்கவில்லை. ஆஸ்பத்திரி கேட்டும் சாத்திவிட்டார்கள். இந்த ஏழைப் பிச்சைக்காரியின் குரல் பணப்பேயின் வயப்பட்டுள்ளவர்களின் செவியில் கேட்குமா? ஒருபோதும் கேட்காது.

மணியோ எட்டுக்கு மேலாகிவிட்டது. என்ன செய்வாள் பாவம்! அந்த சிறுவனோ ஜன்னி கண்டுவிட்டதுபோல தாகம் தாகம் என்று பறக்கவாரம்பித்தான். முதல் நாள் இரவு கிழவரின் தாகத்தினால் அலைந்து திரிந்து வாடி வதங்கிப் பட்ட பாடு இவளால்

மறக்க முடியுமா? இந்த தர்மசங்கடமான நிலைமையில் என்ன செய்வாள் பாவம். சிறுவனைத் தோள்மீதே தூக்கிக்கொண்டு அங்கு சிறிது தூரத்திலிருந்த காப்பிக் கடையில் காப்பி வாங்கிக் கொடுத்தாள். கையிலிருந்த குவளையில் கொஞ்சம் மிச்சமும் வைத்துக்கொண்டு பழயபடியே வந்து மரத்தடியில் உட்கார்ந்தாள்.

பையனின் நிலைமை அதிகரித்துக்கொண்டே வருவதால் இவளுடைய கவலையும் பயமும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்து மிக்க வேதனைக்குள்ளாக்கிவிட்டன. தத்தளித்துத் தவித்துக் கொண்டே மரத்தடியில் உட்கார்ந்துகொண்டிருக்கையில் கேட்டின் வெளிப்புறம் ஒரு ஆள் உட்காரும்படியாகத் தகரத்தினால் கட்டப் பட்டுள்ள காவற்காரர்களின் இடத்தில் ஒரு விளக்கு எரிவது தெரிந்தது.

அதையே உற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தாள். தலையில் பெரிய காயத்துக் கட்டும் போர்வையும் போர்த்துக்கொண்டு ஒரு மனிதன் அந்த இடத்திலிருந்து வெளியில் செல்வதைப் பார்த்ததும் சின்னம்மாளைத் தூக்கி வாரிப்போட்டது. தனக்காக உபகாரம் செய்ய வந்து அனியாயமாக உதை வாங்கிக்கொண்ட கிருஷ்ணன் அவன் என்பதையும் அறிந்து மனம் பதறினாள். தன்பொருட்டு இப்படி யாகிவிட்டதே என்ற விசனம் அவளால் தாங்கமுடியாமல் வேலை செய்தது.

பலவிதமான யோசனையோடு சிறிது நேரம் குழம்பினாள். தியங்கினாள். உடனே ஒருவிதமான தைரியத்துடன் எழுந்து கிருஷ்ணன் எதிரே சென்று சிறுவனைத் தோள்மீது சாத்திக்கொண்டே அவனுக்கு வணங்கி, "ஐயா! மகா பாவி என்னால் தங்களுக்கு இத்தகைய ஆபத்து நேர்ந்துவிட்டது. தலையில் பலத்த அடி பட்டுவிட்டதா? வலி எப்படி இருக்கிறது. இந்த ஆஸ்பத்திரியில் இன்னேரத்தில் தாங்கள் எப்படி வந்தீர்கள்?" என்று கேட்டாள்.

தான் சற்றும் எதிர்பாராதவிதமாக இந்த பிச்சைக்காரியைக் கண்டவுடன் கிருஷ்ணனுக்கு ஆச்சரியமாகிவிட்டது. அவள் வெகு

அன்போடு வணங்கிக் கேட்ட கேள்விகளுக்கு மிக்க சந்தோஷ மடைந்து, "அம்மணீ! அதொன்றுமில்லை, தாங்கள் விசனிக்கவேண் டாம். வேளையின் கூத்து இப்படி எல்லாம் ஆயிற்று. எனக்கும் பொறுத்துப்பொறுத்துப் பார்த்துப் பொறுக்கமுடியாமல் போய் விட்டது. கொஞ்சம் பணமிருந்தால் எத்தனை அக்ரமம் வேண்டுமா னுலும் செய்யலாமா? அவன் செய்துள்ள அனியாயங்கள் ஒன்றிரண் டல்ல.

கேவலம் ஓர் ஏழை என்பதையும் மறந்து அதிலும் ஒரு பெண் பிள்ளை என்பதை அறவே மறந்து அடிக்கும் மூர்க்கனின்—அகம் பாவம் பிடித்த அக்ரமக்காரனின்—செய்கைகள் எப்படி இருக்கும் என்பதைக் கூறவேண்டுமா? அதனால்தான் வந்தது வரட்டும் என்று கூறினேன். அவனை நான் கோர்ட்டு வரையில் இழுத்து அடித்தி ருப்பேன். ஆனால் நானோ பரம ஏழை. தரித்திர தேவதையின் தாண்டவத்தில் தவிப்பவன். அவனோ கொழுத்த செல்வவந்தன். பணத் திமிரினால் தாண்டவம் செய்கிறவன். பணமென்றால் பிணமும் வாய் திறக்குமல்லவா?

அந்தப் பழமொழி வீணாகுமா? நான் எனது சிரமத்தையும் பாராது இங்கு வந்து கட்டு கட்டிக்கொண்டு எங்களுக்குத் தெரிந்த ஒரு வக்கீல் வீட்டிற்குச் சென்று அவரிடம் விஷயங்களைக் கூறி னேன். அதற்கவர் உன்னை அடித்தபோது தகுந்த மனிதர்களாக சாக்ஷி சொல்ல யாராவது இருக்கிறார்களா? அப்படி இருந்தால்தான் இதில் ப்ரவேசிக்கலாமேயன்றி, சாக்ஷி யில்லாமல் ப்ரவேசித்தும் பய னில்லை; அம்மனிதனின் யோக்கியதையோ எனக்குத் தெரியும் தெரிந்து என்ன செய்வது. பணத்தின்மீது அவன் நடக்கிறான். ஆகை யினால் அதற்குச் சரியாக ஏற்பாடு செய்" என்றார்.

உடனே நான் சென்று கூட இருந்தவர்களைச் சாட்சிக்கு அழைத்தேன். ஐயோ! உலகமே! வெட்கக்கேடே! ஒருவராவது சாட்சி சொல்ல மறுத்துவிட்டதோடு "போடா பைத்தியக்காரா! தெருவில் போகிற பிச்சைக்காரிக்கு நீ பரிந்து சண்டையிட்டு அடி வாங்கிக்கொண்டு எங்களையெல்லாம் கோர்ட்டுக்கு இழுக்கிறாயா?

நாங்கள் வரமாட்டோம். அதோடு நீ சற்று ஜாக்ரதையாயிரு. அந்த மனிதன் உன்மேலேயே கேஸ் போடப்போவதாக வதந்தி. அந்த மாதிரி ஏதாவது நடந்தால் அது ஆபத்தாக முடியும். பேசாதே போய்விடு.'' என்று பயமுறுத்திவிட்டார்கள். இதற்குமேல் நான் என்ன செய்வேன்? ஒன்றும் தோன்றவில்லை. வாய் திறக்காமல் விதியே என்று வந்தேன்.

அந்த மனிதன் சிலருக்குப் பணத்தை லஞ்சங்கொடுத்து சாட்சி சொல்லாமலிருக்கும்படிச் செய்துவிட்டதையும் அறிந்தேன். பணம் செய்யும் கூத்து இவை எல்லாம்......இந்த ஆஸ்பத்திரியில் தான் எனக்குக் காவல் வேலை. இன்று இந்த அலேச்சலுக்காக நான் என் சினேகிதனை காவல் வைத்துவிட்டுச் சென்றிருந்தேன். இரவு காவலுக்கு அவன் இருக்க முடியாதென்றான். அதனால் வந்து சேர்ந்தேன். வயிற்றுப் பிழைப்பிற்காக எல்லாக் கஷ்டங்களையும் பட்டுத்தானே தீரவேண்டும். என்னுடைய இந்த வேதனைக்கு மத்தியில் நீ என்னவானாயோ? பிணம் எக்கதியாயிற்றோ? என்ற நினைவுடனிருந்தேன். தகனக்கிரியைகள் நடந்ததா?...என்று விசனத்துடன் கேட்டான்.

இதைக்கேட்ட சின்னம்மாளின் மனம் தத்தளித்தது. நடந்த விஷயங்களையெல்லாம் கூறித் தான் தவித்து நிற்பதையும் சின்னனுடைய நிலைமையையும் தெரிவித்தாள். சிறுவனை க்ருஷ்ணன் தொட்டுப் பார்த்தான். நெருப்பாய் காய்கிறது. முகமோ வாடுகிறது. கண்ணையோ திறக்கவில்லை. க்ருஷ்ணனுக்கும் கவலை யுண்டாகி விட்டது.

"அம்மா! உலகத்தில் அதிகமாகப் பழகாமல் பட்டுக்கொள்ளாமலிருக்கும் பரியந்தம் சுகமோ துக்கமோ தன்னுடையதுதான் பெரிது என்று நினைக்க முடிகிறது. பிறரையறியுங் காலையில் தான் உலகத்திலுள்ள சகல கஷ்டங்களும் தெரிகின்றன. அதிலும் ஏழைகளாகிய நம்போன்றவர்கள் பணத்திமிர் பிடித்தவர்களின் சுழலில் அகப்பட்டுக்கொண்டு எத்தகைய பாடு படுகிறார்கள் என்று நன்றாகத் தெரிகி

றது. இம்மாதிரியான ஜனங்கள் இன்னும் எத்தனைபேர் வாடுகின்ருர்களோ!

உம்.....இந்த அறையில் இப்படி உட்காரு. எத்தனை அவஸ்தைப்பட்டாலும் இப்போது உள்ளே போகமுடியாது. ஏழைகளுக்குமட்டுந்தான் அந்த விதி. காலையில் சீட்டு வாங்கிக்கொண்டு போகலாம். இவ்விடத்திலேயே இரு. இதற்குமேல் பரம தரித்திரனுகிய நான் என்ன சொல்வேன்? செய்வேன். நீ ஆகாரம் செய்ததாக உன்னைப் பார்த்தால் தெரியவில்லை. எத்தனை நாளாயிற்ருே!... ஏழைகளுக்குப் பட்டினி பரம அவுஷதமல்லவா?......

என்பதற்குள் சின்னம்மாள் விசனத்துடன், "ஐயா! ஒரு நாளைக்கு ஒரு வேளையாகாரமாவது நிரந்தரமாகக் கிடைத்துவந்தால் மற்ருெரு வேளை பட்டினி. எல்லாம் அன்ருடம் பிச்சை கிடைப்பது கிழப் பிராணனுகிய என் பாட்டனுருக்கும், அறியாச் சிறு பாலனுகிய என் தம்பிக்கும் அரை வயிறுக்கும் பஞ்சமாகிவிடும். சில நாளைக்கு முழு வயிறுக்குக் கிடைக்கும். அன்றுதான் அதில் மிச்சப்படுத்தி நான் சாப்பிடுவேன். மற்ற நாள் தண்ணீரோ, கஞ்சி வளாவிய தண்ணீரோதான் எனக்குச் சகஜமாகிவிட்டது. இன்று மூன்று நாட்களாகத் தண்ணீரைத் தவிர வேறு ஆகாரம் காணவில்லை. காலையில் என்னுல் தாங்கமுடியாது போய்விட்டதால் ஏதோ தின்பண்டம் வாங்கிச் சாப்பிட்டேன்.....என்ருள். கிருஷ்ணன் "மணி பத்தடிக்கப் போகிறது. எனக்கு நாளைக் காலையாகாரமாக இதோ மோரு சாதம் என் தாயார் கட்டியனுப்பி இருக்கிருள். அதை தயவு செய்து சாப்பிடு. நாளை பிழைத்துக்கிடந்தால் பார்த்துக்கொள்வோம்." என்று கூறிக்கொண்டே அந்த சாதத்தை எடுத்து சின்னம்மாளின் முன்பு வைத்து செம்பில் தண்ணீரும் கொடுத்தான். இதற்கு மத்தியில் 5—6 மோட்டார்கார்கள் வந்தாயிற்று. அவைகளுக்குக் கேட்டு திறந்து வழி விட்டுப் பூட்டி முடிந்தது.

பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் என்ற பழமொழிப்படிக்கு சின்னம்மாளின் மன வேதனையின் தீவிரத்தைவிட பசியின் கொடுமைதான் தாங்கமாட்டாது வதைத்துக் கொண்டிருந்ததால் மறு பேச்

சின்றி அந்த சாதத்தை வெகு ஆவலுடன் சாப்பிட்டு இரு கோப்பை தண்ணீரும் குடித்தாள். பசி ஆறி 'அப்பாடா!' வென்ற பெரு மூச்சு உண்டாகிறது. களைப்பு மேலிட்டது. பின்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் அவளை அறியாமல் நித்திரை வந்துவிட்டது.

இவளுடைய நிலைமையைத் தெரிந்துகொண்ட கிருஷ்ணன், "அம்மா! நீ இந்தப்பக்கமாகப் படுத்துக்கொள்ளு. இன்றுவது நிச்சிந்தையாகத் தூங்கு'' என்று கூறி தலைக்கோர் மணைக்கட்டை கொடுத்தான். சின்னம்மாளுக்கு அப்போது தேக நிலைமை இருந்த சிரமத்தில் ஒன்றுமே தோன்றவில்லை; தெரியவுமில்லை. அப்படியே படுத்துவிட்டாள்.

கிருஷ்ணனுக்கு இந்தப் பெண்ணின் நிலைமையைக் கண்டு மிகவும் பரிதாபமாகிவிட்டது. அவனுடைய அடியின் காயமோ ஒரு புறம் வலி பாதிக்கின்றது. சிறுவனின் நிலைமையோ கவலைக்கிடமாகக் குழம்பிக்கிடக்க அந்த கொடிய இரவின் சுய ஆட்சியின் வேகம் ஆரம்பமாகிவிட்டது.

முன் தினத்தைப்போன்ற பயங்கரமும் சேதமும் இல்லை எனினும் சிறு மழையும் சிறு காற்றும் தடபுடல் செய்துகொண்டிருந்தன. பொழுது விடியும் சமயமாயிற்று. சின்னம்மாள் அலறிக்கொண்டு எழுந்தாள். "அடாடா! என்ன முட்டாள்தனம் செய்துவிட்டேன். என்னுடைய தேக நிலைமையின் கொடுமையினுல் உடம்பு தெரியாமல் தூங்கி உங்களை ச்ரமப்படுத்திவிட்டேனே! நீங்கள் படுத்துக் கொள்ளவில்லையா?'' என்று கேட்டாள்.

கிருஷ்ணன்—இல்லை... எனக்கு வலியின் உபத்திரவம் அதிகமாக வேலை செய்வதால் தூக்கமே வரவில்லை......அது கிடக்கட்டும், நாளைக்கே சரியாகிப்போய்விடும். நீ முதலில் முகங் கழுவிக்கொண்டு சீட்டுக்கொடுக்கும் இடத்திற்குச் சென்று தயாராக இரு. சீட்டு முதலிலேயே கொடுப்பார்கள். அங்கிருந்து ஒருவன் வைத்தியரிடம் அழைத்துச் செல்வான். வைத்தியர் என்ன சொல்லுகிறுரோ அப்படிச் செய்லாம்'' என்றுன்.

உடனே சின்னம்மாள் எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு நெத்தியில் மங்களகரமாக குங்குமம் அணிந்து சிறுவனையும் தூக்கிக்கொண்டுபோய் அந்த இடத்திற்குச் சென்று உட்கார்ந்தாள். இவளுக்கு முன்னலேயே இன்னும் 7—8 பெயர்கள் வந்திருந்தார்கள்.

மணி ஆறு அடித்தவுடனே அந்த அறை திறக்கப்பட்டது. சீட்டு கொடுப்போரும் வந்தார். சுமார் 8 மணிக்குள் சின்னம்மா

ளுக்கு சீட்டு கிடைத்தது. அதை எடுத்துக்கொண்டு டாக்டரிடம் சென்றாள். அங்கு வெகு நேரம் காத்துக்கிடந்து 10 மணிக்கு சின்னம்மாளைக் கூப்பிட்டார். சிறுவனைப் பரிசோதித்துப் பார்த்து, "அம்மா! இவனுக்கு கடுமையான தோஷஜுரம் கண்டிருக்கிறது. இவன் ஆஸ்பத்திரியிலேயே இருந்து மருந்து கொடுத்து கவனித்தால் தான் சீக்கிரம் குணமடையும், இல்லையேல் கஷ்டம்.........டேய்! ப்யூன்!...இந்த பையனை வார்டில் கொண்டு போடு" என்று உத்திரவிட்டார்.

உடனே இரண்டு பேர்கள் வந்துவிட்டார்கள். சின்னம்மாளுக்கோ இந்த அனுபவமெல்லாம் ஒன்றுமே தெரியாது. கேள்விப்பட்டதும் கிடையாது. வந்த ஆட்கள் சிறுவனைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். சின்னம்மாளும் அவர்களைத் தொடர்ந்து சென்றாள்.

சிறிது தூரம் சென்றதும் அவர்கள் சின்னம்மாளும் வருவதைப் பார்த்து, "அம்மா! நீ இங்கெல்லாம் வரக்கூடாது. அந்த கேட்டுடனேயே திரும்பிவிடவேண்டும். நோயாளிகளைத் தவிர வேறு யாரும் வரக்கூடாது; போய்விடுங்கள். நாங்கள் வெகு ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்வோம். கவலைப்படவேண்டாம்"...என்று சொல்லிக்கொண்டே ப்ரம்மாண்ட கட்டிடத்தினுள் மறைந்துவிட்டார்கள்.

இதைக்கேட்ட சின்னம்மாளுக்கு திடுக்கிட்டுவிட்டது. "ஐயா! இதென்ன அனியாய திட்டம்! பையன் என்னை விட்டு ஐந்து நிமிடங்கூட நிற்கமாட்டான். அதோ அழுகிறானே! நான் ஒருத்தித்தான் ஐயா! அவன் பக்கலில் உட்கார்ந்து அவனைக் கவனித்துக்கொள்ளுகிறேன்...என்று இவள் கெஞ்சிக்கொண்டே இருக்கையில், "போம்மா! போ! இங்கு யாரும் வரக்கூடாது. நிறைய பணக்காரர்களாயிருந்தால் தனி விடுதி எடுத்துக்கொண்டு வரலாம். இல்லாவிட்டால் இப்படித்தான்" என்று அங்குள்ள வேறு காவற்காரன் அவளைத் தடுத்துக் கூறினான்.

என்ன செய்வாள் பாவம்! கன்றைப் பிரிந்த தாய்ப் பசுவைப் போல மனந் தவித்தவாறு, "அடாடா! பணக்காரர்களுக்கென்றால் ஒரு நியாயம்! பணம் பேசும். என்னைப்போன்ற பிச்சைக்காரி என்றால் எட்டி உதைதானா?...அட கடவுளே! இதுவா உலகம்! இதுவா நியாயம்! இதுவா உன் லீலை!...ஹா!...பையன் கத்துகிற குரல் இன்னும் கேட்கிறதே!...என்ன செய்வேன் ஈசா?" என்று மனந் தவித்து வாடி வதங்கி பித்துக்கொண்டவள்போல் கண்ணீர் வழிய அப்படியே அசைவற்றுக் கல்போல நின்றுவிட்டாள்.

---

எதிர் பாருங்கள்!　　　　　　எதிர் பாருங்கள்!!

வெளிவரப் போகிறது!　　　　　வெளிவரப் போகிறது!!

எது!　　　　　　எது!!　　　　　　எது!!!

நமது சமூக வாழ்வையே புதியதோர் மாதிரியில் திருத்தி யமைக்கவல்லதும், தாழ்த்தப் பட்டோர் முதலிய வரிடத்து ஒரு மதிப்பை யேற்படச் செய்து முன்னேறச் செய்யவல்லதும் எளிய தமிழ் நடையில் அமைந்ததுமான ஒரு புத்தம் புதிய சமூக நாவல், வெளிவரும் நாளை எதிர் பாருங்கள்.

G. R,

Adv. 1.　　　　C/O ஜகன்மோகினி ஆபீஸ்.

குழந்தைகளுக்கோர் நல் விருந்து!

இணையில்லா இனிமை!

அறிவு வளர்ச்சி!　　　　ஆனந்த மூட்டுதல்!!

182980

GE 523

வை. மு. கோதைநாயகி அம்மாளும், பார்ட்டியும்

| | | |
|---|---|---|
| தாலாட்டு. | ரூ. 2/12. | புத்திமதி. |

சிறப்புறும் ஹாஸ்யம்!　　சிறந்த பொழுது போக்கு!

சொல்லின்பியாளின் நகைச்சித்திரம்.

பெற்றோருக்கு நல்ல சந்தர்ப்பம்



PRINTED AT TATA PRESS, & PUBLISHED BY V. M. PARTHASARATHY, MADRAS

மூன்றாவது பதிப்பு

வெளி வந்துவிட்டது

## வீ ர வ ஸ ந் தா

நவநாகரிகத்தின் ஊழல்களையும், போலிச் சுயேச்சை சுதந்திரத்தின் விபரீதங்களையும் விளக்கிக் காட்டும் அற்புதமான நாவல்

அணா 8.

இரண்டாவது பதிப்பு.

வெளி வந்துவிட்டது.

நான்கு ரூபாய் பெறுமான ருசியுள்ள துப்பறியும் நாவல்

## ஜெ ய ச ஞ் சீ வி

அணா 4.

ரூ. 2 முன் பண மனுப்பினால் இந்த 5 நாவல்களுடன் **படாடோபத்தின் பரிபவம்.**

பட்டமோ பட்டம்

அல்லது

**காலத்தின் கோலம்**

வேலையில்லாத் திண்டாட்டத்தின் அலங்கோலத்தை விளக்கிக் காட்டும். பல திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்த துப்பறியும் நாவல்

அணா 10.

அல்லது **மூன்று வைரங்கள்** **இனாம்**

கண்ணைக் கவரும் சித்திரப் படங்கள் கூடிய 15 ஹாஸ்யக் கதைகள் அடங்கிய

## ப க்ஷ மா லி கா

அணா 6.

பொறுமை என்றும் பெருமை அளிக்கும் உண்மைக் காதலே நன்மை பயக்கும் முதலிய வற்றை நிரூபிக்கும்

## சுகுணபூஷணம்

அல்லது

**அற்ப புத்தியின் அவதி**

துப்பறியும் நாவல்

அணா 4.

**“ஜகன்மோகினி” ஆபிஸ்,**

26, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி சென்னை.

Jaganmohini (September 1935) Regd. No. M. 221

போலி மருந்துகளைப் பற்றி எச்சரிக்கையாக இருங்கள் !!!

# அமிர்தாஞ்சனம்

நாற்பது வருஷங்களுக்கு மேலாக முன்னணியில் நிற்கின்றது.




மற்றவைகள் இதைப் பின்பற்றித்தான் வருகின்றன.

லக்ஷக் கணக்கில் செலவாகின்றது

எல்லா இடங்களிலும் விற்கப்படும்.

அமிர்தாஞ்சன் டிபோ,

சென்னை கல்கத்தா

பம்பாய்.